
THESAM MONTHLY FREE MAGAZINE

# தேசம்

மாதம் ஒருமுறை
வெளிவரும்
இலவச இதழ்

ஒகஸ்ற் 2015 குரல் 44




மாற்றுக் கருத்துக்களுக்கான களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THESAM MONTHLY FREE MAGAZINE
# தேசம்
மாதம் ஒருமுறை
வெளிவரும்
இலவச இதழ்
ஓகஸ்ற் குரல் 44

**தேசம் சஞ்சிகை 1997 முதல் தாயக அரசியல், சமூக, பொருளாதார, கலாச்சார செய்திகள், கட்டுரைகள், ஆய்வுகள் தாங்கி லண்டனில் வெளியாகி வந்தது. 2007 இல் இணையச் சஞ்சிகையாக இணையத்தில் வெளிவந்தது. அதேசமயம் தேசம் பத்திரிகையாக சில இதழ்கள் லண்டனில் வெளியாகி இருந்தது. இதன் தொடர்ச்சியாக எதிர்காலத்தில் இச்சஞ்சிகையை தாயகத்திலேயே வெளியிடத் தீர்மானித்துள்ளோம். மாதம் ஒரு முறை இலவசமாக இவ்விதழை வெளிக்கொண்டுவர உள்ளோம்.**

## சொல்வதை செய்யக் கூடியவர்களுக்கு மட்டும் வாக்களியுங்கள்!

தேர்தல் காலத்தில் வழங்கப்படும் வாக்குறுதிகளுக்கு எந்தக் குறைச்சலும் இருக்காது. கட்சியாக இருந்தால் என்ன, வேட்பாளர்களாக இருந்தாலென்ன வாக்குறுதிகளை அள்ளி வீசுகின்ற வாய்ச்சொல் வீரர்களுக்கு வாக்களிக்காமல் தாம் சொல்கின்ற அரசியலுக்காக கடந்த காலங்களில் தங்களை அர்ப்பணித்த வரலாற்றைக் கொண்டவர்களுக்கு வாக்களியுங்கள்.

தமிழ் கட்சிகளாக இருந்தால் என்ன, சுயேட்சைக் குழுக்களாக இருந்தால் என்ன அவர்கள் என்ன கொள்கையை மக்கள் முன் வைத்துள்ளனர் என்பதை தெளிவாக புரிந்து கொண்டு, அந்தக் கொள்கையை அவர்கள் நடைமுறைப்படுத்துவதற்கான வாய்ப்புகள் சாத்தியக் கூறுகள் இருக்கின்றதா என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு, அவர்களுடைய கடந்த காலச் செயற்பாடுகள் மக்கள் நலன் சார்ந்து இருந்ததா என்பதையும் உறுதிப்படுத்திக் கொண்டு உங்களுடைய வாக்கைச் செலுத்துங்கள்.

வெற்றிபெறுவதற்கான வாய்ப்புகளை ஒருவருக்கு வாக்களிக்கும் தகமையாகக் கொள்வது மிகவும் ஆபத்தானது. வெறும் போலி நம்பிக்கையின் அடிப்படையில், எழுந்தமானமாக வாக்களிப்பதன் மூலம் மக்களை மீண்டும் மீண்டும் ஏமாற்றுகின்ற, மக்களில் ஏறிச் சவாரி செய்கின்றவர்களை தெரிவு செய்வதற்கு உங்கள் வாக்குகளைப் பயன்படுத்த வேண்டாம்.


உங்கள் வாக்குகளின் பலத்தை உங்களிலும் பார்க்க உங்களிடம் வாக்குகளைப் பெற வருபவர்கள் மிக நன்றாகவே அறிந்து வைத்துள்ளனர். அதனால் போலி வாக்குறுதிகள், போலி யான நம்பிக்கைகள், போலியான எதிர்பார்ப்புகளை முன்வைத்து அல்லது, போலியான உபாயங்களை, போலியான எச்சரிக்கைகளைக் கொண்டு கிலிகொள்ளச் செய்து உங்கள் வாக்குகளை வேட்டையாடுவார்கள். அதற்கு அனுமதியாதீர்கள்.

உங்கள் வாக்கு மிகப் பலமானது. உங்களுடைய வாழ்வை, நீங்கள் வாழ்கின்ற சமூகத்தின் வாழ்வை மாற்றி அமைக்கின்ற வல்லமை அதற்கு உண்டு. அதனைச் சரியாகப் பயன்படுத்துவது உங்களுடைய பொறுப்பு. மக்களாகிய நீங்கள் பொறுப்புடனும் அரசியல் விழிப்புணர்வுடனும் செயற்பட்டால் மட்டுமே பொறுப்பான ஆட்சியை உங்களால் ஏற்படுத்த முடியும். உங்கள் வாக்குகளை அரசியல் விழிப்புணர்வுடன் பயன்படுத்துவதன் மூலமே ஜனநாயக ஆட்சியை சாத்தியமாக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துரோகம் கூட்டமைப்பின் மாறாத கொள்கை!

-விஜயகுமாரன்



தமிழ் நிலம் எங்கும் இலங்கை அரசுகளால் கொல்லப்பட்ட தமிழ் மக்களின் உடல்கள் புதைக்கப்பட்டிருக்கின்றன. குளங்களில், ஏரிகளில் எமது மக்களின் குருதி உறைந்து போயிருக்கிறது. கூதல் காற்றில் இலைகள் உதிர்ந்து விழுவது போல எமது வாழ்வு வீழ்ந்து கிடக்கிறது. இத்தனைக்கும் காரண-மான இலங்கையின் இனவெறி அரசுகளுடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பு கூடிக் குலாவும். இனப் படுகொலையாளிகளான இலங்கை இராணுவத்தின் தலைமைப் பொறுப்பில் இருந்து வன்னிப் படுகொலையை நடத்தி முடித்த சரத் பொன்சேகாவை தமிழ் தேசியக் கூட்டமைப்பு எந்த விதக் குற்ற உணர்வும் இன்றி தேர்தலில் ஆதரித்தது.

இனப் படுகொலையாளி மகிந்தாவின் அமைச்சரவையில் அமைச்சராகவும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராகவும் இருந்த மைத்திரி சிறிசேனாவுடன் அது எந்த விதக் கூச்சமும் இன்றி கூட்டு வைத்தது.

ஆனால், முன்னாள் போராளிகளை கட்சியில் சேர்த்தால் அதன் புனிதம் கெட்டு விடுமாம். தமிழ் மக்களிற்கு ஒரு தீர்வு பெற்றுக் கொடுப்பதற்காகவே உயிர் வாழும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரின் இலட்சியப் பயணத்திற்கு முன்னாள் போராளிகள் பெரும் தடையாக இருப்பார்களாம். "முன்னாள் போராளிகளை கூட்டமைப்புக்குள் இணைத்துக் கொள்வதால் கட்சிக்கு பாரிய சிக்கல் நிலை உருவாகும். தமிழ் மக்களின் பிரச்சினைகளை சர்வதேச ரீதியில் ராஜதந்திர மட்டத்தில் பேசிவரும் இச்சூழலில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளை கூட்டமைப்புக்குள் இணைந்துக்கொள்வது உசிதமானதல்ல. ஆகையினால் இந்த முடிவினை கூட்டமைப்பு ஒருபோதும் எடுக்காது என சம்பந்தனின் திருவாசகங்கள் தெரிவிக்கின்றன.

வலதுசாரித் தலைமைகள் ஒரே வர்க்கம் என்ற அடிப்படையில் எப்பொழுதுமே மக்களின் எதிரிகளுடன் கூட்டுச் சேருவார்கள். ஆனால் போராளிகளுடன், புரட்சியாளர்களுடன் என்றைக்குமே தமது பிற்போக்குத்தனத்தின் காரணமாக பகைமை கொள்வார்கள். பிரித்தானிய காலனியக் கொடுங்கோலர்களை எதிர்த்ததினால் தமது வாழ்வின் பெரும் பகுதியை மூடிய சிறைகளின் இருள் வெளிகளிற்குள்வாழ்ந்தஇந்தியசுதந்திரப் போராளியும், பொதுவுடமைவாதியுமான மன்மதநாத் குப்தா தமது "அவர்கள் அபாயத்தில் வாழ்கிறார்கள்" என்ற தமது போராட்ட வரலாற்றுப் பதிவில் காந்தியும், காங்கிரசும் எவ்வாறு பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளுடன் சேர்ந்திருந்தார்கள், எவ்வாறு போராட்டங்களை காட்டிக் கொடுத்தார்கள், எவ்வாறு போராளிகளை புறம் தள்ளினார்கள் என்பதை வலியுடனும், வேதனையுடனும் பதிவு செய்கிறார்.


பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் போன்ற புரட்சியாளர்களுடன் லாகூர் சிறை வைக்கப்பட்டிருந்த ஜதீன் தாஸ் என்ற போராளி சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து வீரமரணம் அடைந்தார். மிகவும் எளிதாக அவர் விடுதலை அடைந்திருக்க முடியும். அவருக்கு பிணை நிற்க முன்வருபவரிடம் அவரது மறுப்பை தெரிவிக்காமல் இருந்திருந்தால் போதும். ஆனால் அவ்வாறு செய்ய மறுத்து விட்டு தனது மரணத்தை தழுவினார். அவரது மரணம் நாடு முழுவதும் வருத்தத்தையும், மனக் கொதிப்பையும், எழுச்சியையும் ஏற்படுத்தியது. ஆறு இலட்சம் மக்கள் அவரது இறுதிப் பயணத்திற்கு அஞ்சலி செலுத்தினர்.

நாடு முழுவதும் மிகப் பெரும் அளவில் உணர்ச்சிவசப்பட்ட நிலை

**12ம் பக்கம் பார்க்க**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விடுதலைப்புலிகளின் முன்னாள் போராளிகள் ஜனநாயக அரசியலில் இணைவதை வரவேற்கிறோம். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரின் கருத்துக்கள்.

முன்னாள் போராளிகளின் அரசியல் பிரவேசத்தை மக்கள் எந்த வகையில் ஆதரிக்கப் போகின்றார்கள் என்பது எனக்கு தெரியாது. ஆனால், இதனை நான் வரவேற்கின்றேன். நானும் ஒரு முன்னாள் போராளியாக போராளியாக இருந்துதான். ஜனநாயக அரசியலுக்கு வந்து இருண்டு தடவைகள் பாராளுமன்ற உறுப்பினராக இருந்திருக்கின்றேன்.

சுரேஸ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் போன்றவர்களும் முன்னாள் போராளிகளாக இருந்துதான் பாராளுமன்ற உறுப்பினர்களாக வந்துள்ளார்கள். தெற்கிலே ஜே.வி.பி நாட்டில் மிகப்பெரிய கிளர்ச்சியை மேற்கொண்டது. பின்னர், தற்போது நீண்டகாலமாக பாராளுமன்றத்தில் தங்கள் பிரதிநிதிகளை கொண்டுள்ளது. சர்வதேச ரீதியாக பார்த்தால் ஐரிஸ் போராளிகள் இன்று அயர்லாந்திலே மிகப் பெரிய சக்தியாக மாறியிருக்கின்றார்கள். அது மட்டுமல்ல, பலஸ்த்தீன் போன்ற நாடுகளில் எல்லாம் இது நடந்திருக்கின்றது. தென்னாபிரிக்காவில் நெல்சன் மண்டேலா, யசீர் அரபாத் எல்லோரும் முன்னர் துப்பாக்கி ஏந்தியிருந்தவர்கள் தாம்.

இப்போது விடுதலைப் புலிகள் முன்னாள் போராளிகள் அரசியலுக்கு வந்திருப்பதை எல்லோரும்வரவேற்கவேண்டும். அவர்களும் வந்தால் கணிசமான பிரச்சினைகளுக்கு தீர்வு காணமுடியும். அவர்களுக்கு பிரத்தியேகமான பிரச்சினைகள் இருக்கின்றன. கிட்டத்தட்ட 12 ஆயிரத்திற்கும் மேலான முன்னாள் போராளிகள் புனர்வாழ்வளிக்கப்பட்டு இன்று சமூகத்துடன் இணைக்கப்பட்டிருக்கின்றார்கள். அவர்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கின்றார்கள். புலம்பெயர்ந்த நாடுகளில் இந்த போராளிகளின் வீரம் சொரிந்த போராட்டத்தை வீடியோவாக்கி விற்றவர்கள் அதிலிருந்து ஒரு சதத்தையேனும் முன்னாள் போராளிகளுக்கு வழங்கவில்லை. அவர்கள் இப்போது சிந்திக்கின்றார்கள். தாங்களும் ஜனநாயக அரசியலுக்கு வந்து அதிகாரத்தைப் பெற்று, தாங்களே தங்களின் பிரச்சினைகளை கையாளும் நோக்குடன்தான் அவர்கள் ஜனநாயக அரசியலுக்கு வந்திருக்கின்றார்கள். அவர்களை நாங்கள் வரவேற்கின்றோம்.

**கேள்வி-** *நீங்கள் முன்னாள் போராளியாகவிருந்து இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழ் ஜனநாயக அரசியலுக்கு வந்தீர்கள். அந்த ஒப்பந்தத்தில் முன்னாள் போராளிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட வேண்டும் என்று தெளிவாக கூறப்பட்டுள்ளது. ஆனால், நீதிமன்ற உத்தரவின் பேரில் புனர்வாழ்வளிக்கப்பட்ட போராளிகளின் நிலை அவ்வாறில்லை. எதிர்காலத்தில் அவர்களுக்கு எதிராக குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படும் நிலை வராது என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை.*

அப்படி இல்லை. அவர்கள் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டிருக்கின்றார்கள் என்பது முழுமையாக சட்டத்தின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பதாகத்தான் நான் கருதுகின்றேன். ஏதாவது குழப்ப நிலைமைகள் ஏற்பட்டால் அவர்கள் சந்தேகக் கண்கொண்டு பார்க்கப்படுவார்கள் என்பது இயல்பானதே. நாங்கள் 87ம் ஆண்டு ஜனநாயக அரசியலுக்கு வந்துவிட்டோம் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக. அவர்கள் 2009ம் ஆண்டு யுத்தம் முடிவடைந்ததன் பின்னால்தான் வெளிப்படுத்தப்படுகின்றர்கள். இப்போதுதான் கொஞ்சம் கொஞ்சமாக விடுவிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பட்டிருக்கின்றார்கள். எனவே, இப்போதுதான அவர்கள் ஜன நாயக அரசியலுக்கு வரக்கூடிய சூழல் ஏற்பட்டுள்ளது வாய்ப்பு கிடைத்திருக்கின்றது. அவர்கள் தங்களை ஜனநாயக அரசியலுக்குள் ஒழுங்கமைப்பதற்கான அவ காசம் தேவைப்பட்டது. இப் போது வந்திருக்கின்றார்கள். இது அவர்களுக்கு சரியான நேரம் என்றே நான் நினைக்கின்றேன்.

ஜே.வி.பியினர் ஜனநாயக அரசியலுக்கு வரும்போது அவர் களுக்கு நெருக்கடிகள் இருந்தன. அவர்கள் மக்களின் ஆதரவுடன் பாராளுமன்ற அரசியலுக்கு வந்த பின்னர்தான் அந்த நெருக்கடிகளி லிருந்து மீண்டனர். முன்னாள் விடு தலைப்புலிகளும் இவ்வாறான ஜன நாயக அரசியலுக்கு வந்து தங் களுக்கான அங்கீகாரத்தையும் அதி காரத்தையும் பெறும் போதுதான் சந்தேகப் பார்வையிலிருந்தும் நெருக்கடிகளிலிருந்தும் அவர்கள் மீள்வதற்கான வாய்ப்பு ஏற்படும் என்று நான் நினைக்கின்றேன்.

**கேள்வி-** *அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகள், விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் இன்ன மும் புலம்பெயர்ந்த நாடுகளில் இருப்பதாக கூறுகின்றன. தன்னலம் சார்ந்து செயற்படுகின்ற இந்த நாடுகள் சூழ்நிலைக்கு ஏற்றவாறு தம்மை மாற்றிக் கொள்ளும் நிலை யில், விடுதலைப்புலிகளுக்கு எதி ரானஅழுத்தங்கள்ஏற்பட்டால்,இப் போதிருப்பதை விடவும் நிறு வன மயப்பட்ட முன்னாள் போரா ளிகளுக்கு நெருக்கடிகள் அதிகம் ஏற்படாதா?*

சர்வதேச நிகழ்ச்சிநிரல் என் பது, தங்களுக்கு தேவை ஏற்பட் டதால் எங்களுக்கு ஆயுதம் தரு வார்கள். விடுதலைப்புலிகளை மீள வும் இயங்கச் சொல்லி அவர்கள் ஒத்தாசைகள் புரிவார்கள் அல்லது வேறு ஆயுதக்குழுக்களைஉருவாக்க முயல்வார்கள். கொழும்பு பிரச் சினையாகஇருந்தால்எங்களைபலப் படுத்துவார்கள். கொழும்பு நண்ப னாக வந்தால் எங்களை கைவிடு வார்கள் இதுதான் சர்வதேச வர லாறு. இலங்கையில் மட்டுமல்ல உலகம் முழுவதும். உள்ள நாடு களில் குழப்பங்களை ஏற்படுத் துவதும், அவற்றை தங்கள் கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வந்து வளங்களை சுரண்டுவதும் இராணு- வத் தளங்களை அமைப்பதும்தான் வரலாறாக இருக்கின்றது.

நான் இப்போது உள்ளூர் அர சியலையே பேசுகின்றேன். விடு தலைப்புலிகள் அமைப்பு நிறுவனக் கட்டமைப்புடன் புலம்பெயர்ந்த நாடுகளில் இயங்குவது உண்மை- அது வேறு. அங்குதான் நாடு கடந்த தமிழீழ அரசு என்று ஒன்றிருக்கின்றது. அதனை ஜன நாயக கட்டமைப்பு என்றே அவர் கள் சொல்கின்றார்கள். அதை நாங் கள் ஏற்றுக்கொள்கின்றோம் என் றால் இங்கே தளத்திலே உள்ள முன்னாள்போராளிகள்பிரத்தியேக மாக தங்களுக்கு பிரச்சினைகள் இருப்பதாக கூறுகின்றார்கள் அவற்றை நாங்கள் ஏற்றுக் கொள்கின்றோம். ஏனென்றால் இது ஒரு பெரிய சமூகம். 12 ஆயிரம் இளைஞர்கள் சமூகத்துடன் இணைந்திருப்பது என்பது பெரிய விடயம். இது ஒரு நல்ல சிக்னல் என்றுதான் நான் நினைக்கின்றேன்.

முன்னாள் போராளிகள் என் பதை நான் ஏன் அழுத்தமாக சொல்கின்றேன் என்றால், நாங்கள் முன்னாள் போராளிகளாக இருந்து அரசியலுக்கு வந்திருக்கின் றோம். அந்த வலி எங்களுக் கிருக்கின்றது. நாங்கள் மக்கள் மத்தி யில் வந்தபோது, மக்களுக்கு எத னையும் செய்யாமல் அவர் களின் உணர்ச்சிகளை தூண்டி விட்டுக்காண்டு தேசியம் கதைத் துக் கொண்டிருந்தவர்களுக்கு பிரச்சினையாக இருந்தது. அவர் களும் எங்கள் மீது சேறு பூசினார் கள். நாங்கள் ஜனநாயக அரசிய லுக்கு வந்து 20 வருடங்களாகிய பின்னர் இப்போதும் எங் களை ஆயதக் குழுக்கள் என்று தான்சொல்கின்றார்கள். விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளி கள் வந்தாலும் இதனை முகம் கொடுத்துத்தான் ஆக வேண்டும்.

**கேள்வி-** *இந்த முன்னாள் போரா ளிகள் தமிழ் தேசியக் கூட்ட மைப்போடுஇணைந்துஇடம்கேட் கப்போனதிலும் பார்க்க மற்று மொரு முன்னாள் போராளி களான உங்களிடம் ஏன் வர வில்லை. நீங்களும் அதற்கு முயற் சிக்கவில்லையா? அல்லது இதிலும், துரோக முன்னாள் போராளிகள், தியாக முன்னாள் போராளிகள் என்று பிரிவினைகள் உள்ளனவா?*

பிரித்தாளும் இந்த போலித் தேசியம் பேசி வரும் அரசியல் வாதிகள்தாம் எங்களை இணைய விடாமல் தடுத்துக் கொண்டி ருக்கின்றார்கள். முன்னாள் போரா ளிகள் அனைவரும் ஒரு கோட் டில் இணையக்கூடிய நாள் விரை வில் வரும். எங்களுக்குள் முரண் பாடுகள் இருக்கின்றன நாங்கள் மறுக்கவில்லை. ஆனால், தியாகங் களை நான் எப்போதும்

**9ம் பக்கம் பார்க்க**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2015 பாராளுமன்றத் தேர்தல்:
## வடக்கில் பன்மைத்துவ அரசியல் நோக்கிய நகர்வு

- த. ஜெயபாலன்

தென்னிலங்கையின் தேர்தல் களம் வழமையான தேர்தல்கள் போல் விறுவிறுப்பாக இருக்க வட இலங்கையின் தேர்தல் களம் வழமைக்கு மாறாக விறுவிறுப்பாக உள்ளது. நீண்ட காலமாக தேர்தல் புறக்கணிப்பில் இருந்த வடஇலங்கையில் போட்டியின்றியும் பின்னர் இரு முனைப் போட்டியுடனும் தேர்தல் கள் இடம்பெற்றது. தற்போது ஒரு தலைமுறை இடைவெளியின் பின்னர் மீண்டும் பன்முனைப் போட்டியுடன் ஒரு தேர்தல் வடக்கில் நடைபெறுகிறது.

இதுவரை அரசுக்கு எதிரான எதிர்ப்பு அரசியல் என்ற மூலாம் பூசிக்கொண்டு தமிழ் தேசியத்தை மொத்தமாகக் குத்தகைக்கு எடுத்துக் கொண்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு இம்முறை குறிப்பிடத்தக்க சவாலை எதிர்கொள்ள வேண்டி இருக்கிறது. தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பிரிந்த தமிழ் தேசிய மக்கள் முன்னணி தமிழர்களின் தேசியத்துக்கான குத்தகையை இம்முறை தங்களுக்கு கேட்கின்றனர். பெரும்பாலும் இளம் மாணவப் பருவத்தின் அரசியல் எதிர்ப்பின் வெளிப்பாடாக தமிழ் தேசிய மக்கள் முன்னணி எதிர்பார்க்கப்படுகின்றது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இருந்து 2010 இல் ஓரம்கட்டப்பட்ட தமிழ் தேசிய மக்கள் முன்னணியை, தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான சவாலான அமைப்பாக கொண்டு வந்ததில் புலம்பெயர்ந்த தமிழர்களின் பங்களிப்பு கணிசமானது. வாக்களிக்கின்ற உரிமையற்ற புலம் பெயர்ந்த தமிழர்களும் அரசியல் ரீதியில் பிளவுபட்டுள்ளனர். நிதி மற்றும் பிரச்சாரங்களில் தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கு ஒரு சாராரும், தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு மறு சாராரும் ஆதரவளித்து வருகின்றனர்.

புனர்வாழ்வு பெற்ற முன்னாள் தமிழீழ விடுதலைப் போராளிகளைக் கொண்டு சுயேட்சையாகக் களம் இறங்கி இருக்கின்ற ஜனநாயகப் போராளிகள் கட்சியும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வாக்கு வங்கியிலேயே பெரும்பாலும் கைவைக்க உள்ளனர்.

இவர்களுடன் இலங்கையின் இரு பிரதான கட்சிகளின் கூட்டுக்கள் போட்டியிடுகின்றன. கிழக்கில் மட்டக்களப்பில் முன்னால் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவசேநதுரை சந்திரகாந்தன் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிடுகின்றவர்களில் குறிப்பிடத் தக்கவர். இவர் தேர்தலில் வெற்றிபெறத் தவறினாலும் தேசியப்பட்டியலில் இவருக்கு ஆசனம்




தென்னிலங்கையின் தேர்தல் களம் வழமையான தேர்தல்கள் போல் விறுவிறுப்பாக இருக்க வட இலங்கையின் தேர்தல் களம் வழமைக்கு மாறாக விறுவிறுப்பாக உள்ளது. நீண்ட காலமாக தேர்தல் புறக்கணிப்பில் இருந்த வட இலங்கையில் போட்டியின்றியும் பின்னர் இரு முனைப் போட்டியுடனும் தேர்தல்கள் இடம்பெற்றது. தற்போது ஒரு தலைமுறை இடைவெளியின் பின்னர் மீண்டும் பன்முனைப் போட்டியுடன் ஒரு தேர்தல் வடக்கில் நடைபெறுகிறது.

இதுவரை அரசுக்கு எதிரான எதிர்ப்பு அரசியல் என்ற மூலாம் பூசிக்கொண்டு தமிழ் தேசியத்தை மொத்தமாகக் குத்தகைக்கு எடுத்துக்கொண்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்முறை குறிப்பிடத்தக்க சவாலை எதிர்கொள்ள வேண்டி இருக்கிறது. தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பிரிந்த தமிழ் தேசிய மக்கள் முன்னணி தமிழர்களின் தேசியத்துக்கான குத்தகையை இம் முறை தங்களுக்கு கேட்கின் றனர். பெரும்பாலும் இளம் மாண வப் பருவத்தின் அரசியல் எதிர்ப் பின் வெளிப்பாடாக தமிழ் தேசிய மக்கள் முன்னணி எதிர்பார்க்கப் படுகின்றது.

தமிழ் தேசியக் கூட்ட மைப்பில் இருந்து 2010இல் ஓரம்கட்டப்பட்ட தமிழ் தேசிய மக்கள் முன்னணியை, தமிழ் தேசி யக் கூட்டமைப்புக்கு எதிரான சவாலான அமைப்பாக கொண்டு வந்ததில் புலம்பெயர்ந்த தமிழர் களின் பங்களிப்பு கணிசமா னது வாக்களிக்கின்ற உரிமையற்ற புலம்பெயர்ந்த தமிழர்களும் அரசியல் ரீதியில் பிளவுபட்டுள்ள னர். நிதி மற்றும் பிரச்சாரங்களில் தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கு ஒரு சாராரும், தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு மறு சாராரும் ஆதரவளித்து வருகின்றனர்.

புனர்வாழ்வு பெற்ற முன் னாள் தமிழீழ விடுதலைப் போரா ளிகளைக் கொண்டு சுயேட்சை யாகக் களம் இறங்கி இருக்கின்ற ஜனநாயகப் போராளிகள் கட்சியும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வாக்கு வங்கியிலேயே பெரும் பாலும் கைவைக்க உள்ளனர்.

இவர்களுடன் இலங்கையின் இரு பிரதான கட்சிகளின் கூட்டுக்கள் போட்டியிடுகின்றன. கிழக்கில் மட்டக்களப்பில் முன் னால் கிழக்கு மாகாண முதலமைசர் சிவசேநதுரை சந்திரகாந்தன் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிடுகின்றவர்களில் குறிப் பிடத்தக்கவர். இவர் தேர்தலில் வெற்றிபெறத்தவறினாலும் தேசியப் பட்டியலில் இவருக்கு ஆசனம் வழங்கப்படும் எனத் தெரிய வருகிறது. ஐக்கிய தேசி யக் கட்சியில் யாழில் விஜயகலா மகேஸ்வரன் முக்கிய போட்டியாளர். நீண்டகாலமாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி யுடன் இணைந்து இருந்த ஈழ மக்கள் ஜனநாய கக் கட்சி இம்முறை தனித் துத் தேர்தலில் போட்டி யிடுகின்றது. இது ஒப் பீட்டளவில் அவர்களுக்கு ஒரு தனித்துவத்தை வழங்கி உள்ளது.



தமிழ் தேசியம் பற்றிய கோரிக்கையில் பன்மைத்துவம் காணப் பட்ட போதும் தமிழ் மக்களின் அரசியல் பன்மைத்துவம் பிரதிநிதித்துவப் படுத்தப்படவில்லை. பெண்கள் மற் றும் ஒடுக்கப்பட்ட சமூகங் களின் பிரதிநிதித்துவம் மிகக் குறை வாக அல்லது இல்லை என்றே சொல்லலாம்.

தமிழ் தேசியக் கூட்ட மைப்பில் யாழ். மாவட்டத்தில் மதினி நெல்சனும் வன்னி மாவட் டத்தில் சாந்தி சிறீஸ்கந்தராஜாவும் போட்டியிடுகின்றனர். மட்டக் களப்பிலும் அம்பாறையிலும் பெண்கள் நிறுத்தப்படவில்லை. திருகோணமலையில் இந்திராணி தர்மராஜா போட்டியிடுகின்றார். 5 தேர்தல் மாவட்டங்களில் 44 வேட்பாளர்களில் மூன்று பெண் கள் மட்டுமே நிறுத்தப்பட்டுள் ளனர்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியில் சின்னமணி கோகில வாணி, சிதம்பரநாதன் பத்மினி ஆகிய இருவர் களமிறக்கப்பட்டு அவர்களுக்கான பிரச்சாரங் களுக்கும் முக்கியத்துவம் வழங்கப் பட்டு வருகின்றது.

ஈபிடிபி இல் முன் னாள் யாழ். நகர மேயர் யோகேஸ் வரி பற்குணராஜா போட்டியிடு கின்றார். ஐக்கிய தேசியக் கட்சியில் விஜயகலா மகேஸ்வரன் முதன்மை வேட்பாளராக நிறுத்தப் பட்டு உள்ளார். ஒப்பீட்டு அளவில் போட்டியிடுகின்ற பெண்களில் இவர் மட்டுமே வெற்றிக்கு அண்மை யாக இருப்பவராக உள்ளார்.

ஆனால் 15க்கும் அதிகமான ஆசனங்களைப் பெற்றுக்கொள் ளும் என எதிர்பார்க்கப்படுகின்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பெண்ணாவது வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகத் தெரியவில்லை.

"தமிழ்த்தேசிய கூட்டமைப்பினில் போட்டியிடும் பெண் வேட்பாளர் என்றவகையில் நாடாளுமன்றில் பெண் விகிதாசாரத்தை பேணவேனும் கட்சி தலைமை என்னை வெற்றிபெற வைக்கபாடுபட வேண்டும். ஆனால் களத்தில் நிலைமை அவ்வாறில்லை" என வேட்பாளர் மதினி நெல்சன் குற்றம்சாட்டியுள்ளார். அவர் தொடர்ந்தும் கூறுகையில் "கூட்டமைப்பினில் உள்ள வடமாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் எதிர்கொண்டவை பற்றி இப்போது புரிந்து கொள்கின்றேன். அவரிற்கு இத் தேர்தலில் போட்டியிட சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தால் மகிழ்ச்சியடைந்திருப்பேன். அவரிற்காக பாடுபட்டிருப்பேன்" எனக் குறிப்பிட்டார்.

மதினி நெல்சனின் அதே குற்றச்சாட்டை சாந்தி சிறிஸ்கந்தராஜாவும் முன் வைத்துள்ளார். "யுத்தத்தில் பாதிக்கப்பட்டவள். அரச அதிகாரியாக இருந்தவள் என்பதை அவர்கள் வெளிப்படுத்தவில்லை எனக்கு செல்வாக்கு உள்ள இடத்தில் அவர்கள் கூட்டுச் சேர விரும்புகிறார்கள். ஆனால் ஏனைய இடங்களுக்கு என்னை அழைத்துச்சென்று அறிமுகப்படுத்த கூட்டமைப்பினர் தயாராகவில்லை. எனக்கு ஆதரவு அதிகரிப்பதை அவர்கள் பெரிதாக விரும்பவில்லை" எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒடுக்கப்பட்ட சமூகங்களின் பிரதிநிதித்துவமும் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இல்லை. தமிழ் தேசியக்கூட்டமைப்பு தமிழ் மக்களின் பன்முகத்தன்மையை வெளிப்படுத்தாத ஒரு கட்சியாகவே தொடர்ந்தும் இயங்கி வருகின்றது.

இப்பாராளுமன்றத்துக்கான தேர்தல் கூட அபிவிருத்திக்காக வாக்களிப்பதா உரிமை சார்ந்த விடயங்களுக்காக வாக்களிப்பதா என்பதன் அடிப்படையிலேயே முன்நிறுத்தப்பட்டு உள்ளது. அபிவிருத்தி என்ற அடிப்படையில் பார்க்கின்ற போது ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற




உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா, முன்னாள் பா.உ எம்.சந்திரகுமார், எஸ். ஏ. உதயன் ஆகி-யோர் தாங்கள் செயற்படுத்திய திட்டங்களுக்கான பெரும் பட்டியலையே வைத்துள்ளனர். எம். சந்திரகுமார் கிளிநொச்சியில் விவேகானந்தா கல்லூரியைக்கட்டி அம்மாணவர்கள் வட மாகாணத்திலேயே நூறுவீதம் கணிதத்தில் சித்தியடைய வைத்து ஆச்சரியத்தை ஏற்படுத்தியவர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு நீண்ட கால எதிர்ப்பு அரசியலின் பின்னர் ஈபிடிபி இன் மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்ற நிலைக்கே தற்போது வந்துள்ளதுடன் இணக்க அரசியலைச் செய்யவும் தன்னைத் தயார் படுத்திக் கொண்டுள்ளது. செயற்திறன் என்ற அடிப்படையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆட்சியில் இருக்கும் வட மாகாண சபை செயற்திறனற்ற வெறும் தீர்மானங்களை இயற்றுகின்ற ஒரு அமைப்பாகவே உள்ளது.

குழந்தைப் போராளியாக தமிழீழ விடுதலைப் புலிகளில் இணைந்து அடிப்படைக் கல்வியறிவைக் கூடப் பெற்றிராத முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் மேற்கொண்ட அபிவிருத்தித் திட்டங்களில் ஒரு பகுதியையாவது முன்னாள் நீதியரசர் சி.வி விக்கினேஸ்வரன் தலைமையிலான வட மாகாண சபையால் மேற்கொள்ள முடியவில்லை. ஆனால் இன்று சி.வி.விக்கினேஸ்வரனும் கூட நடுநிலை என்ற பெயரில் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு எதிரான நிலைப்பாட்டையே எடுத்துள்ளார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு இலங்கைப் பேரினவாத அரசுகளுக்கு எதிரான பெயரளவிலான எதிர்ப்பு அரசியலையாவது கொண்டிருப்பதாலும் பன்மைத்துவ அரசியலுக்கு அது அவசியமானதாகையாலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்தும் ஒரு பலமான சக்தியாக அமைய வேண்டிய தேவை அழுத்தமாக வைக்கப்பட்டு வருகின்றது. ஏனைய கட்சிகள் அதற்கான மாற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீட்டை கடந்த காலங்களில் வழங்கத் தவறியுள்ளன. தமிழ் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்தும் தமிழ் மக்களுடைய உரிமை விடயங்களை வடக்கு கிழக்குக்கு வெளியே கொண்டு செல்வதற்கு முன்னாள் பா.உ எம். ஏ. சுமந்திரன் மிக அவசியமானவராக உள்ளார்.

சுமந்திரனின் அரசியல் நுழைவும் அதன் ஆரம்ப காலங்களும் அவரை சராசரி தமிழ் தேசியவாதியாக அல்லாமல் தூர நோக்குடையவராக விடயங்களை வெளிப்படையாக பேசக்கூடியவராக, சிங்கள மக்களிடமும் சர்வதேசத்திடமும் தமிழர்களுடைய பிரச்சினையைக் கொண்டு செல்லக் கூடியவராக கருதப்பட்ட போதும் பிற்காலங்களில் அவரும் சராசரி தமிழ் தேசியவாதிகள் போன்று தேவைக்கேற்ப சந்தர்ப்பவாதியாக மாறியது அவர் மீது, தமிழ் தேசியம் சார்ந்தவர்களுக்கும்அதைநிராகரிப்பவர்களுக்கும் விசனத்தை ஏற்படுத்தி உள்ளது.

இருந்தாலும் தமிழ்தேசிய கூட்டமைப்பிற்கு தலைமை தாங்கக்கூடிய தகுதி எம்.ஏ. சுமந்திரனை விட வேறொருவருக்கு இருப்பதாகத் தெரியவில்லை. இத்தேர்தலில் எம். ஏ. சுமந்திரனின் வெற்றி தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு மிக அவசியமானது. யாழ்.மாவட்டத்தில் சுமந்திரனும் திருகோணமலையில் இரா.சம்பந்தரும் தோல்வி அடைந்தால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஓட்டி இல்லாத படகு ஆகி, கரைசேர முடியாத நிலைக்கு சென்றுவிடும்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஏனையவர்களைப் பொறுத்தவரை அவர்கள் வெறும் எண்ணிக்கைக்கு உரியவர்களே. இதுவரை காலமும் அவர்கள் தங்களால் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்பதை நிரூபிக்கத் தவறியுள்ளனர். அவர்களுக்கு தமிழரசுக் கட்சி தங்களை ஓரங்கட்டுவது தெரிந்தும் தங்கள் ஆசனங்களை தக்கவைப்பதற்காகவே தங்கள் சுயகௌரவத்தை இழந்தும் அவர்கள் தமிழ் தேசியக்கூட்டமைப்பில் ஒட்டிக் கொண்டுள்ளனர்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஒரு கற்பனாவாத அரசியல் கொள்கையுடன் - இரு தேசம் ஒரு நாடு - தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்ற தன் அடிப்படையில் தேர்தலில் களம் இறங்கி உள்ளனர். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அதிருப்தி வாக்குகளை இவர்கள் பெற்றுக்கொள்வார்கள். இவர்களுடைய கடந்த காலம் அரசியல் துரோகம் (மலையக தமிழர்களின் பிரஜாவுரிமை பறிப்பு), சந்தர்ப்பவாதம் நிறைந்தது (ஆசனங்கள் வழங்கப்படாததால் ததேகூ இலிருந்து வெளியேறியது).

அடிப்படையில் தமிழ் கட்சிகள் அனைத்துமே ஈபிடிபி உட்பட, தமிழ்தேசியத்தையே வெவ்வேறு வடிவங்களில் வெளிப்படுத்தி உள்ளனர். ஒற்றைப் பரிமாண, ஒற்றைப் பிரதிநிதித்துவ அரசியலில் இருந்து ஒரு பன்மைத்துவ பிரதிநிதித்துவத்துடன் கூடிய அரசியலுக்கு தமிழ் மக்கள் நகர்வது ஆரோக்கியமான மாற்றமே.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக தமிழ் மக்கள் கட்சிகள் வைக்கின்ற கொள்கையின் அடிப்படையில் அந்தக் கொள்கைகளை எதற்காகவும் விட்டுக் கொடாத தலைவர்களின் ஆளுமையின் அடிப்படையில் அவர்களின் கடந்த கால வரலாறுகள் அவர்களுடைய இன்றைய நிலையை உறுதிப்படுத்துகின்றதா என்ற அடிப்படையில் வாக்களிக்க வேண்டும். அப்படி தேர்வு செய்ய முயன்றால் வெற்றி வாய்ப்புக்கு மிகத் தொலைவில் உள்ள சிறிதுங்க ஜெயசூரியவின் சோசலிசக் கட்சிக்கே வாக்களிக்க வேண்டும். மக்கள் என்றைக்கு அவ்வாறு வாக்களிக்க முற்படுகிறார்களோ அன்று மக்களில் ஏறிச் சவாரி செய்கின்ற அரசியலுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க முடியும். ■

## விடுதலைப்புலிகள்...

**5ம் பக்கத் தொடர்ச்சி**

மதிக்கின்றேன். எங்கள் கட்சியும் மதிக்கின்றது. ஏனெனில் நாங்களும் பல போராளிகளை இந்த மண்ணுக்காக இழந்திருக்கின்றோம். விடுதலைப் புலிகளும் இழந்திருக்கின்றார்கள். அரசியல் தலைமைகளுக்குள்ளே முரண்பாடுகள், வேறுபாடுகள் இருக்கலாம் ஆனால், போராளிகள் ஒரு நோக்கத்திற்காகவே எல்லோரும் துவக்குத் தூக்கினது. நாங்கள் விளையாட்டுத் துவக்கு தூக்கவில்லை. நிஜமாக, ஒரு இனத்தின் விடுதலைக்காக துவக்கு தூக்கினோம் முரண்பாடுகளுக்கிடையில் எங்களுக்குள் ஒற்றுமை இருக்கின்றது. அந்த ஒற்றுமையை வைத்து எதிர்காலத்தில் நாங்கள் ஒரு கோட்டில் இணையும் வாய்ப்பிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் களம் :


## கேள்வி பதில் -சேனன்

- திருகோணமலையில் காணாமல் போனவர்களின் உறவினர்கள் தேர்தலைப் பகிஸ்கரிக்குமாறு கோருகின்றனர் சில கீபோட் புரட்சியாளர்களும் தேர்தலைப் பகிஸ்கரிக்கக் கோருகின்றனர். மக்களுக்கு நியாயமான தெரிவும் இருப்பதாகத் தெரியவில்லை. பாராளுமன்ற அரசியலால் மக்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வு இல்லை என்ற பலமான வாதமும் உள்ளது. ஏன் 2015 பாராளுமன்றத் தேர்தலை பகிஸ்கரிக்கக் கூடாது?

பகிஸ்கரிப்பு என்ற கருத்து எமக்களிக்கப்படும் தேர்வுகளின் பற்றாக்குறையில் இருந்து எழுகிறது. தமது நலன்களைச் சரியாக பிரதிநிதித்துவம் செய்ய யாரும் இல்லை என வடக்கு கிழக்கில் வாழும் பலர் ஆதங்கப்படுவதும் இக்கோரிக்கையை நோக்கி அவர்களை நகர்த்தியுள்ளது. இலங்கைப் பாராளுமன்றத்தில் உறுப்பினராகுவதற்கு போட்டியிடும் பலர் தாம் பாராளுமன்றத்துக்கு போவதால் என்ன சாதிக்க விரும்புகின்றனர் என்பதை தெளிவாக முன்வைப்பதில்லை. திருமண வீட்டுக்கு அடிக்கும் பத்திரிகையில் போடுவது போல் தமது குடும்ப பாரம்பரியம், படிப்பு, பட்டம் என்பது பற்றி வெறும் தற்புகழ்சிகளைத் தாங்கியவையாக இருக்கின்றன சில தேர்தல் துண்டுப்பிரசுரங்கள்.

வெளிநாட்டுச் சக்திகளைக் கொண்டு வந்து விடுவோம். அல்லது, இந்தியா வந்து காப்பாத்தும் போன்ற வித்தை காட்டுதல்கள் தாண்டிய அரசியல் உரையாடல் இல்லை. இலங்கைப் பாராளுமன்றத்துக்குள் நுழைந்து என்ன செய்யப் போகிறார்கள் என்று அவர்கள் சொல்வதுமில்லை. அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாகி எதையாவது சாதித்து விடுவார்கள் என்ற நம்பிக்கையும் மக்களிடம் இல்லை. இந்நிலையில் பாராளுமன்ற அரசியல் மற்றும் தேர்தல் நடவடிக்கைகள் மேல் மக்களுக்கு நம்பிக்கை குன்றுவது இயற்கையே. இதன்பாற்பட்ட வெறுப்பாகவே தேர்தலில் பங்கு பற்றுதல் குறைவதும் பகிஸ்கரிப்பு கோரிக்கை பலப்படுவதும் அதிகரிக்கிறது.

மக்களின் இந்த மனநிலையைப் புரிந்துகொள்ளும் அதேசமயம் இந்த மனநிலை அரசியல் செயலூக்கமற்ற நிலையில் இருந்தும் உருவாகிறது என்பதையும் அவதானிக்க வேண்டும். அதாவது மக்கள் அரசியலில் தாம் நேரடிப் பங்களிப்பு செய்ய



தயங்குவதன் வெளிப்பாடாகவும் இது இருக்கிறது. மக்கள் அரசியலில் நேரடியாகப் பங்களிக்க வேண்டும் என நாம் வாதிட்டு வருகிறோம். பகிஸ்கரிப்பு தீர்வல்ல. அரசிற் போலிகள் அதிகாரத்தை சுவைக்க விட்டுவிட்டு சிந்திக்கும் மக்கள் ஒதுக்கப்பட்டுவிடும் ஆபத்தும் இதன்பின்னால் இருக்கிறது. ஒதுங்குதலுக்குப் பதிலாக மக்கள் தமது குரலை அரசியலில் காத்திரமாக பதிய முன்வரவேண்டும். இருக்கும் அரசியலும், அரசியல் வாதிகளும் சரியில்லையானால் இன்னுமொரு மாற்று அரசியல் நடவடிக்கையை முன்னெடுக்க மக்கள் முன் வரவேண்டும்.

மக்களின் ஜனநாயக நடவடிக்கைகளையும் அவர்தம் உரிமைகளுக்கான போராட்ட நடவடிக்கைகளையும் பிரதிநிதித்துவம் செய்யும் ஒருவர் பாராளுமன்றம் செல்ல வேண்டும். பாராளுமன்றத்துக்குள் எதிர்ப்பை கட்ட முயற்சிக்காதவர் எவ்வாறு அதற்கு வெளியிலான எதிர்ப்பாளர்களிடம் வாக்கு கேட்க முடியும். அதிருப்தியாளர்கள் ஒதுங்கிப் போகக்கூடாது. மாறாக தங்களின் குரலை அழுத்தம் திருத்தமாக பதியும் அரசியலை நோக்கி நகரவேண்டும். இந்த அடிப்படையிலேயே பகிஸ்கரிப்பு சரியான நடவடிக்கையல்ல என்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• *அடிப்படையில் மக்களை நேசிக்கின்ற தலைவர்கள், கட்சிகளைக் காட்டிலும் அம்மக்களை ஏமாற்றுகின்றவர்கள் மீண்டும் மீண்டும் அம்மக்களாலேயே தங்கள் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்படுவதற்கு என்ன காரணம்?*

இது நியாயமான கேள்வி. இந்த நிலவரத்தை நாம் உலகெங்கும் பார்க்கக்கூடியதாக இருக்கிறது. இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. மக்கள் மத்தியில் சுதந்திரமான காத்திரமான அரசியல் உரையாடல் அனுமதிக்கப்படாமையும் இதற்கு ஒரு காரணம்.

ஏதோ ஒரு விதத்தில் தமக்கு உதவக்கூடும் என்ற அரைகுறை நம்பிக்கையில்தான் மக்கள் வாக்குகளை வழங்குகின்றனர். சில அரசியல்வாதிகளின் முழுமையான ஏமாற்றுக் குணங்கள் மற்றும் பிற்போக்குத்தனமான போக்கிரி அரசியல் பற்றி மக்களுக்கு முன்கூட்டியே தெரிவிக்கப்படுவதில்லை. ஊடகங்களை நடத்துபவர்கள் தமது சொந்த நலன்கள் சார்ந்து அந்தந்த ஊடகங்களை நடத்துகின்றனர். அதன்படி முழுத் தகவல்களும் மக்கள் மத்தியில் சென்றடைவதற்கு தடையாக அவர்களும் இருக்கிறார்கள். மக்கள் நலன்சார்ந்து இயங்குகின்ற கட்சிகள், அரசியல்வாதிகள், பெரும் ஊடகங்களுக்கும் வியாபாரங்களுக்கும் எதிராக நின்றுதான் மக்கள் நலன்களை முன்னெடுக்க வேண்டியிருக்கிறது. ஏனெனில் மக்கள் நலன்களும் கார்பரேட் மற்றும் அதிகாரத்தின் நலன்களும் நேரெதிரானவை.

ஆக, மக்கள் சார்ந்து நிற்பவர்கள் மக்களிடம் சென்றடைவதில் ஏராளமான பிரச்சினைகள் இருக்கின்றன. அதிகாரத்தைக் கையில் வைத்திருக்கும் அனைத்து வித சக்திகளையும் எதிர்த்தும் பல பொய்ப் பிரச்சாரங்களை எதிர்த்தும் இது நிகழ வேண்டியிருக்கிறது. இதனாற்தான் அத்தகைய சிறந்த அரசியல்வாதிகள் இறந்த பிறகு வரலாற்றில் முக்கியத்துவ




மாகிறார்களே தவிர அவர்களின் சமகாலத்தில் அவர்களுக்கு அங்கீகாரம் கிடைப்பதில்லை. உதாரணத்துக்கு சிறிதுங்க ஜெயசூரிய போன்ற வேட்பாளரை எடுத்துக் கொள்ளுங்கள். சோசலிச கட்சி சார்பாக யாழ்ப்பாணத்தில் போட்டியிடும் இந்த சிங்கள இனத்தைச் சார்ந்த ஒரு போட்டியாளர் மட்டும்தான் தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமை பற்றியும் பல்வேறு சனநாயக உரிமைகள் பற்றியும் தெட்டத் தெளிவாக அச்சமின்றி முன்வைத்து வருகிறார். ஆனால் இவரை யாரும் கண்டு கொள்வதில்லை.

அவர் வெல்லப் போவதில்லை அதனால் அவரைப் பற்றி பேசி என்ன பயன் என்ற பேச்சு ஒரு பக்கம் - அவர் வென்று விட்டால் தாம் மக்களை விற்கும் வியாபாரங்கள் முடிவுக்கு வந்து விடும் என்ற பயம் ஒரு பக்கம் - என அவரைப் புறக்கணிக்க ஆயிரம் காரணங்கள் இருக்கின்றன இவர்களுக்கு. யார் வைக்கும் கொள்கை சரி, யார்வைக்கும் கோரிக்கைகள் மக்கள் நலன் சார்ந்தவை, யார்வைக்கும் கொள்கைகள் சமூகத்தை முன்னேற்றும் என்ற அறிவார்ந்த உரையாடல் மக்கள் மத்தியில் மூலைக்கு மூலை நடக்கும் வரை இந்த நிலை தொடரத்தான் போகிறது.

• *பல பத்து வேட்பாளர்களிடையே தங்களை சரியாகப் பிரதிநிதித்துவம் செய்யக்கூடிய ஒருவரை மக்கள் எப்படி அடையாளம் காண முடியும். உணர்வின் அடிப்படையிலா? அறிவின் அடிப்படையிலா இந்த முடிவை எடுப்பது?*

உணர்வும் அறிவும் முற்று முழுதாக தனிப்பட்ட விசயங்கள் அல்ல. உணர்வு முற்றுமுழுதாக அறிவு மழுங்கிய செயற்பாடு என்று பார்ப்பது தவறு. ஆனால், உங்கள் கேள்வி எந்த அரசியல் உள்ளடக்கமும் இன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயங்குபவர்கள் பற்றி இருக்கிறது என நினைக்கிறேன். ஆழ்ந்த உள்ளடக்கமின்றி வெற்று உணர்ச்சிப் பேச்சுக்களை மட்டும் பேசி மக்களை உசுப்பேத்திவிட்டு வாக்குக் கேட்கும் அரசியல்வாதிகள் இருக்கிறார்கள். இதே அரசியல் வாதிகள்தான் தேர்தலில் வென்ற கையுடன் மக்களின் உணர்வை மதிக்காது தமது சொந்த லாபம் சார்ந்து இயங்க ஆரம்பித்து விடுகிறார்கள். நுணுக்கமாக பார்த்தால் இவர்கள்தான் உணர்வு மங்கிய மந்தமானவர்களாக இருக்கிறார்கள். மக்களின்உணர்வைமதிப்பவர்கள் எமாற்ற முதல் கொஞ்சமாவது யோசிக்கக்கூடும்.

மக்கள் தாம் யாருக்கு ஆதரவு வழங்குவது என்பதை அவரின் அழகு- ஆளுமை- குடும்பம் -பாரம்பரியம் - படிப்பை வைத்து தீர்மானிக்கக் கூடாது. மாறாக அவர்கள் முன்வைக்கும் கொள்கைகள் - கோரிக்கைகள் என்ன என்பதைஅவர்கள்அலசிஆராய்ந்து முடிவெடுக்க வேண்டும். சமூகம் சார் கொள்கைகளை முன்வைக்கிறார்களா- அதை நிறைவேற்றும் ஆழமும் திடமும் அவர்களிடம் இருக்கிறதா - அவ்வாறு மக்கள் சார் கொள்கைகளுக்காக போராடிய வரலாறு அவர்களுக்கு உண்டா - அவர்கள் வென்ற தருணத்தில் எத்தகைய நடவடிக்கைகளை முன்னெடுத்தார்கள் போன்ற கேள்விகளை கேட்டு அதன் அடிப்படையில் மக்கள் தமது முடிவுகளை எடுக்க வேண்டும். பதிலாக லொட்டறி எடுப்பதுபோல் போனால் போகுது ஒருக்கா போட்டுப் பார்ப்பம் என்ற பாணியில் வாக்கு போடக்கூடாது. லொட்டறி விழா விட்டால் கொஞ்சப் பணம் தான் போகும். தவறான அரசியல் வாதிக்கு ஆதரவளித்தால் வாழ்க்கையையே பறிபோய்விடும். ஈழத்து யுத்த வரலாற்றில் தமிழ் பேசும் மக்கள் இந்தப் பாடத்தை திறம் படக் கற்றிருக்கிறார்கள். அந்தப் பாடங்களை உபயோகித்து அவர்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும்.

(சேனன்: தொழிலாளர் சர்வதேசத்துக்கான கமிட்டியின் தெற்காசிய ஆய்வாளர். பிரித்தானிய சோசலிச கட்சியின் நீண்டகால உறுப்பினர், தமிழ் சொலிடாரிற்றி அமைப்பின் முக்கிய உறுப்பினர். இரு கட்டுரைப் புத்தகங்களை தமிழிலும் ஒரு வரலாற்றுப் புத்தகத்தை ஆங்கிலத்திலும்எழுதியிருக்கிறார்.)

3ம் பக்க தொடர்ச்சி

## துரோகம் கூட்...

யில் இருந்தது. ஆனால் காந்தியும், காங்கிரசும் மூன்று குரங்குகளைப் போல வாய் பொத்தியிருந்தார்கள். கண்களை மூடியிருந்தார்கள். காதுகளை மூடியிருந்தார்கள். இது தொடர்பாக சுபாஸ் சந்திரபோஸ் பின்வருமாறு எழுதினார். "நாட்டின் இதயத்தையே அசைத்து விட்ட ஜதீன் தாசின் தியாகம் காந்தியிடம் எத்தகைய மனப்பதிவையும் ஏற்படுத்தவில்லை என்பது தெளிவாக தெரிந்தது. தான் வேண்டுமென்றே தான் கருத்துக் கூறாமல் இருந்து விட்டதாக காந்தி கூறினார். ஏனென்றால் அவ்வாறு தான் கருத்து கூறியிருந்தால் அது சாதகமற்ற முறையில் தான் இருந்திருக்கும் என்று கூறினார்.

ஆனால் இந்தியாவில் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதியாக இருந்த வைஸ்ராய் இர்வின் பிரபுவைக் கொல்ல புரட்சியாளர்கள் தொடுத்த தாக்குதலைக் கண்டு காந்தி மனம் பதைபதைத்துப் போனார். காந்தியின் காங்கிஸ் கட்சி பின்வருமாறு தீர்மானம் நிறைவேற்றியது. "வைஸ்ராய் பயணம் செய்த வண்டியின் மீது தொடுக்கப்பட்ட வெடிகுண்டு தாக்குதலை காங்கிரஸ் கட்சி வன்மையாக கண்டிக்கிறது. இத்தகைய நடவடிக்கைகள் தேசிய குறிக்கோள்களிற்கு ஊறு விளைவிக்கும் என்ற உறுதியான கருத்தை காங்கிரஸ் கட்சி மீண்டும் வலியுறுத்துகிறது. வைஸ்ராய் மயிரிழையில் தப்பியது குறித்து காங்கிஸ் கட்சி தனது மகிழ்ச்சியை தெரிவித்துக் கொள்கிறது.


போராளியின் உயிர்த் தியாகத்தை புறக்கணித்த காந்தி தேசிய குறிக்கோளைக் காட்டி பரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கு சேவை செய்தார். தமிழ் மக்களின் பிரச்சினைகளை சர்வதேச ரீதியில் ராஜதந்திர மட்டத்தில் பேசிவரும் இச் சூழலில் முன்னாள் போராளிகளை கூட்டமைப்புக்குள் இணைந்துக்கொள்வது உசிதமானதல்ல. ஆகையினால் இந்த முடிவினை கூட்டமைப்பு ஒருபோதும் எடுக்காது என சம்பந்தன் சொல்கிறார். மகிந்த ராஜபக்சாவுடன் சேர்ந்து கொன்ற இந்தியாவும், அமெரிக்காவும், மேற்குநாடுகளும்தான்இந்த சர்வதேசம். இத்தனை ஆயிரம் மக்களை துடிக்க துடிக்க கொன்ற போது வராத சர்வதேசம் இனி வந்து தமிழ்மக்களின் பிரச்சினைகளைதீர்த்துவைக்குமாம். போராட்டங்களைகாட்டிக்கொடுப்பவர்கள் எப்போதும் ஒரே மாதிரித் தான் பொய் சொல்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# த.தே.கூ தலைவர்கள் வெளிநாடுகளில் குடும்பங்களை வைத்துக் கொண்டு அரசியல் வியாபாரம் செய்கின்றனர் என வட மாகாணசபை முதலமைச்சர் குற்றம்சாட்டுகிறார்!

தொகுப்பு - த. ஜெயபாலன்



தமிழ்தேசிய கூட்டமைப்பின் மேலான அதிருப்தி மக்கள் மத்தியில் வளர்ந்து வருகிறது. அவர்களுக்கு எதிராக காரசாரமான விமர்சனங்கள் பல தரப்புகளில் இருந்தும் வைக்கப்பட்டு வருகிறது. கூட்டடைப்பு சார்பாக முதலமைச்சராக இருக்கும் சி.வி. விக்னேஸ்வரன் அவர்கள் கடுமையான விமர்சனத்தைக் கூட்டமைப்புத் தலைவர்கள் மேல் வைத்திருக்கிறார்.

தேர்தலில் தான் 'நடு நிலமை' எடுக்கப்போவதாகவும், எந்தக் கட்சியையும் ஆதரிக்கப் போவதில்லை என்றும் அவர் சொல்லியிருப்பினும் கூட்டமைப்புத் தலைமைகளுக்கு தான் ஆதரவு வழங்க முடியாத நிலையிலேயே இந்த முடிவுக்கு அவர் தாவியிருக்கிறார் என்பது தெளிவாக தெரியும் ஒன்று. இந்த அர்த்தத்தில் அவரது 'நடு நிலமை' என்பது கூட்டமைப்பு தலைமைகளுக்கு எதிரானதாக இருக்கிறது.

ஓகஸ்ட் 2 இல் வெளியிடப்பட்ட காணொளி நேர்காணலில் முதலமைச்சர் வெளியிட்ட கருத்துக்களை இங்கு சுருக்கமாக தொகுத்தத் தருகிறோம்.

"நான் யாரையும் தனிப்பட்ட முறையில் தாக்கவில்லை" என்று ஆரம்பித்தார் முதலமைச்சர். "இன்றுள்ள தலைமைத்துவம் சரியானதா என்பதற்கு நான் பதில் சொன்னேன் என்றால், எனக்கு அடியும் நல்லா விழும். ஆனால், நான் பதில் சொல்லுறன். பதில் சொல்லுறன். பதில் சொல்ல வேண்டிய கட்டம் வந்திட்டுது" எனத் தொடர்ந்த முதலமைச்சர், தான் வைக்கப் போகும் விமர்சனங்கள் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தும் - கூட்டமைப்பு தலைமை அதற்கெதிராக எவ்வளவு எதிர்ப்பை வைக்கம் என்பது பற்றிய தெளிவுடனயே பேசினார்.

"தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பல தலைவர்களுடைய குடும்பம் இந்தியாவில் இருக்கின்றது. இவர்கள் (கூட்டமைப்பை) ஒரு பிசினஸ்ஸை நடத்துகிற மாதிரிதான் நடத்திக்கொண்டு... அந்தந்த நேரத்திற்கு வந்து வாக்குகளை எடுப்பதும் போவதும்..."

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமைகள் பல வெளிநாடுகளில் குடும்பங்களை வைத்துவிட்டு ஊருக்கு உபதேசம் செய்துகொண்டு திரிவதை அவர் வன்மையாக கண்டித்தார். வெளிநாடுகளில் குடும்பங்களை வைத்துள்ள தலைவர்களான இரா சம்பந்தன் (த.தே.கூ தலைவர், இந்தியா), மாவை சேனாதிராஜா (தமிழரசுக் கட்சித் தலைவர், இந்தியா), செல்வம் அடைக்கலநாதன் (தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர், இந்தியா), என். சிறிகாந்தா (தமிழீழ விடுதலை இயக்கத்தின் யாழ் மாவட்ட வேட்பாளர், அவுஸ்திரேலியா), வினோதாரலிங்கம் (தமிழீழ விடுதலை இயக்கத்தின் வன்னி மாவட்ட வேட்பாளர், பிரித்தானியா), சுரேஸ் பிரேமச்சந்திரன் (ஈபி.ஆர்.எல்.எப். சுரேஸ் அணியின் தலைவர், கனடா) ஆகியோர் முதலமைச்சரின் சொல்லம்புகளுக்கு இலக்காகி உள்ளனர்.

கூட்டமைப்பு தலைமைகள் இளைய சமுதாயத்தை உள்வாங்க மறுக்கும் பிடிவாதம் பற்றியும் அவர் சாடினார். "என்னைப் பொறுத்தளவில். தமிழ் தலைமைத்துவம் அறுபது எழுபது வய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திற்கு மேற்பட்ட ஆட்களைத்தான் கொண்டிருக்கிறது. இரண்டாம் கட்ட தலைமைத்துவத்தை நாங்கள் இன்னும் ஏற்படுத்தவில்லை" என்ற அவர், இது பற்றி தான் ஏற்கனவே கூட்டமைப்பு தலைவர்களுடன் பேசியது பற்றியும் அவர்களின் அக்கறையற்ற நடவடிக்கை பற்றியும் மேலும் விளக்கினார்.


"இன்னொரு விடயத்தையும் நான் சுட்டிக்காட்ட வேண்டும். எங்களுக்குள்ள வளங்கள் குறைவு. தலைமைத்துவத்திற்கு வயது போயிட்டுது. இந்த நிலையில், தலைமைத்துவத்திற்கு ஏதாவது ஒன்று நடந்தால் நாங்கள் பெரும் பிரச்சினையிலும்சீரழிவிலும்முடிய வேண்டிவரும். ஆகவே, நாங்கள் இரண்டாம் கட்ட தலைவர்களை உருவாக்குவதற்கு எல்லா நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என்று சொன்னேன். மாவையிட்டையும் இதைப்பற்றிச் சொன்னேன்.

ஓமோம் செய்யத்தான் வேணும், எங்கள் இளைஞர் அணி எல்லாத்துக்கும் அப்பிடி செய்யோணும் இப்படிச் செய்யோணும் எண்டு சொல்லுறதுதான், ஆனால் எதுவுமே நடக்கிறதில்லை. இப்ப இன்னுமொரு உதாரணம் தாறன். பாராளுமன்றத்தில் போய் இஞ்சை நடக்கிற பல விசயங்களை எந்தளவுக்கு சொல்லி நடவடிக்கை எடுக்கிறம் என்பதும் பிரச்சினையாக இருக்கிறது. இப்ப இந்த மகாவலி சம்பந்தமாக எந்தளவுக்கு தெளிவுபடுத்தி பாராளுமன்றத்தில் சொல்லியிருக்கிறம்?"

"மகாவலி தண்ணீரை வட மாகாணத்திற்கு கொண்டு வர வேண்டும் என்று அரசாங்கம் ஒற்றைக் காலில் நிற்கிறது. இது வரை ஒரு சொட்டுக் கூட வட மாகாணத்திற்கு வரவில்லை. ஆனால், மகாவலி அதிகார சபைக்கு கீழ் மகாவலி எல் வலையம் ஒன்றை வட மாகாணத்திற்குள்ளேயே நிர்ணயப்படுத்தி, இந்த இடத்திற்குத்தான் தண்ணீர் வரப்போவதாக மகாவலி திட்டத்தில் இருந்தது என்று கூறி, அந்த இடத்தில் நாங்கள் மக்களை கொண்டுவந்து குடியேற்றுகிறோம் என்று கூறி, அந்த இடங்களில் சிங்கள மக்களை கொண்டுவந்து குடியேற்றியிருக்கிறார்கள். கன காலத்துக்கு முதல், அந்த தண்ணீர் இங்கு வரப் போகின்றது என்று கூறித்தான் இது நடந்தது."

"தண்ணீரை கொண்டு வாறம், தண்ணீரைக் கொண்டு வாறம் என்று கூறி வேறு விசயங்களையும் இந்த அரசாங்கம் கொண்டுவரப் பார்க்குது. இரணைமடு வரைக்கும் மகாவலி சபை இருந்து கொண்டு- அதுவரைக்கும் சிங்கள மக்களை கொண்டுவந்து அதுக்குள்ளே போடுது. நாளைக்கு இது என்ன மாதிரி பாதிக்கப் போகின்றது என்று பாருங்கள்..." என வரப்போகும் பிரச்சினையைச் சுட்டிக்காட்டிய முதலமைச்சர் கூட்டமைப்பு தலைமை இவைபற்றி கண்டு கொள்வதில்லை - பாராளுமன்றத்தில் இவர்கள் இவை பற்றிப் பேசுவதில்லை என்ற பாரதூரமானகுற்றச்சாட்டைமுன்வைத்தார். கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மக்களில் இருந்து அந்நியப்பட்டவர்களாகவும் பாராளுமன்றத்தில் மக்களின் பிரச்சினைகளை முன்வைத்து பேசாதவர்களாகவும் இருக்கும் நிலையை அவர் அம்பலப்படுத்தினார்.

"எந்தத் தலைவராக இருந்தாலும், தமிழ் மக்களின் தலைவர்களாக இருந்தால், அவர்கள் இங்கு இருக்க வேணும். மக்களோடு மக்களாக இங்கு வாழ வேணும். வாழ்ந்தால்தான் மக்களுக்கு தலைமைத்துவம் கொடுக்கலாம், நடத்திக்கொண்டு போகலாம். இதைவிட்டு. அந்தந்த நேரத்திற்கு மாத்திரம் வந்து மக்களிடம் வாக்குகளை கேட்கிறது...? இது சரிவராது.



மக்களோடு இருந்து அவர்களது பிரச்சினைகளை தீர்க்கக் கூடிய விதத்தில் நாங்கள் சிந்திக்க வேணும். அதற்குரிய நடவடிக்கைளை எடுக்க வேண்டியது பற்றிநாங்கள்சிந்திக்கவேணும். அதற்கு நாங்கள் தியாகப்படுத்த வேணும்.. எங்களை நாங்கள் அர்ப்பணிக்க வேணும். அந்தளவிற்கு தலைவர்கள் இருந்தால்தான் எங்களுக்கு.. தமிழ் மக்களுக்கு விமோசனம் கிடைக்கும். இல்லையென்று சொன்னால் நாங்கள் ஒரு காலமும் விமோசனத்தை எதிர்பார்க்க முடியாது"

இந்த கூரிய சொற்கள் திரு சம்மந்தன் ஐயா மற்றும் சுமந்திரன் போன்றோரை நேரடியாக குறிவைத்து தாக்கியது போன்றிருந்தது. தேர்தல் காலங்களில் மட்டும்தான் மக்களிடம் வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசுகிறார்கள் - பாராளுமன்றத்தில் பெரும்பான்மை கட்சிகளின் எடுபிடி அரசியலை செய்கிறார்கள் - மக்களின் பணத்தில் வெளிநாடுகளுக்கு திரிகிறார்கள் - மக்களின் தேவைகள் பிரச்சினைகளை இவர்கள் கண்டு கொள்வதுமில்லை அதுபற்றி பேசுவதுமில்லை. தேர்தல் காலத்தில் மட்டும் வெற்றுப் பிரச்சாரத்தை செய்கிறார்கள். போன்ற ஏற்கனவே புழக்கத்தில் இருந்த கூட்டமைப்பு பற்றிய கருத்துக்களை முதலமைச்சர் செவ்வி மேலும் உறுதிப்படுத்தியிருந்தது.

கூட்டமைப்பினர் தாம் மேற்கு நாடுகளோடு ராஜதந்திர உறவுகளில் ஈடுபட்டு வருவதாகவும் - இந்தியாவைக் கைக்குள் வைத்துக்கொண்டு செயற்படுவதாகவும் பல தேர்தல் மேடைகளில் பொய்ப் பிரச்சாரங்களை செய்து வந்திருக்கின்றனர். இந்தியா, இலங்கை அரசுடன் நெருக்கமாக ஏற்படுத்தியிருக்கும் ஒப்பந்தங்கள் மற்றும் சர்வதேச குற்ற விசாரணையை மறுத்து ஐக்கிய நாடுகள் சபை இலங்கை அரசு சார்பாக உள்ளக விசாரணைக்கு அழுத்தம் கொடுக்கத் தொடங்கியிருப்பது போன்ற விபரங்களை மூடி மறைத்து பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இது பற்றிய கடுமையான அதிருப்தி புலம்பெயர் மக்கள் மத்தியில் அதிகமாக இருக்கிறது. வடக்கு மாகாணசபை இதை ஏன் முன் வைக்க கூடாது என லண்டனில் நடந்த கூட்டத்தில் கேட்கப்பட்ட போது முதலமைச்சர் சொன்ன பதில் மக்களை திடுக்கிட வைத்தது. தேர்தல் நடைபெறுகிறது எனக் கூறி இதை கூட்டமைப்பு தலைமை தட்டிக் கழிக்கும் என்றும் அவர்கள் தமக்கு தேவையானவற்றை மட்டும் தேர்தலில் மக்களிடம் எடுத்துச் செல்வார்கள் என்றும் முதலமைச்சர் சுட்டிக்காட்டினார்.

பழைய அரசுக்கும் புதிய அரசுக்கும் பெரிய வித்தியாசமில்லை எனக்கூறிய முதலமைச்சர் வடக்கு கிழக்கில் இராணுவம் அகற்றப்படவேண்டும் என்ற கோரிக்கை சார்பாக பேசும்போது இது ஒரு "ஆயிரம் வருசத்துக்கு நடக்காது" என அவர் கூறினார். இது போன்று இலங்கை அரசு தொடர்ந்தும் தனது அடக்குமுறை ஆதிக்கத்தை தொடர்வது பற்றியும் வடமாகாண சபையின் இயலாமைகள் பற்றியும் சுட்டிக்காட்டிய முதலமைச்சர் - அதே சமயம் தமிழ் தேசியகூட்டமைப்பு இவற்றுக்கெதிராக உருப்படியான எதிர்ப்புகளை வைக்க வக்கற்றது என குறிப்பிட்டுப் பேசியதை லண்டன் கூட்டத்தில் பலரும் ஏற்றுக்கொண்டனர்.

தான் கொழும்பில் பிறந்து வளர்ந்ததால் முழுமையாக வடகிழக்கு நிலவரம் தனக்கு முன்பு தெரிந்திருக்கவில்லை என்றும் தற்போதுதான் யாழ்பாணத்து நிலவரங்கள் விளங்குவதாகவும் நேர்மையுடன் ஒத்துக்கொள்ளும் முதலமைச்சர், தமிழ் பேசும் மக்களின் தேசிய அபிலாசைகள் பதின்மூன்றாம் திருத்தச்சட்டத்தையும் தாண்டிச் செல்வது பற்றியும் பேசினார். "பதின்மூன்றாம் திருத்தச் சட்டம்... இதுகளை எடுத்து வைத்துக்கொண்டு கதைச்சுக்கொண்டு...? நாங்கள் அவர்களுக்கு (தமிழ்மக்களுக்கு) முழுமையான தீர்வு ஒன்றை எடுத்துக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் எங்களுக்குள் தன்பாட்டில் வருகிறது" என அவர் கூறினார்.

வடக்கின் அரசியல் சமூக நிலமைகளை தெரிந்திராத ஒருவரை- அரசியலில் இதுவரை ஈடுபட்டிராத ஒருவரைத் தேர்தலில் நிறுத்தி அவரை முதலமைச்சராக்கியதன் நோக்கமென்ன என்ற கேள்வி எமக்கு எழுகிறது. மக்களுக்கு செய்த சேவையின் அடிப்படையில் வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்கு பதிலாக கூட்டமைப்பின் தலைமை தமக்கு விசுவாசமானவர்களை முன் தள்ளும் அரசியல் செய்துவருகிறது என்பதற்கு இது சான்று.

இருப்பினும் யாழ்ப்பாணத்தில் சிறிது காலமாக வாழ்ந்து வரும் முதலமைச்சர் மக்களின் துன்பங்கள் - இயலாமைகள் - இலங்கை அரசு அவர்களை அந்நியப்படுத்தும் விதம் - ஆகிய வற்றை இப்பொழுதுதான் தெரிந்து கொள்ளத் தொடங்கியிருக்கிறார். இந்த மக்களின் சமூகத் தேவைகள் எவ்வாறு அவர்களின் தேசிய அபிலாசையாக வெளிப்படுகிறது என்ற புரிதலையும் தற்போது தான் உணரத் தொடங்கியிருக்கிறார். இந்த களநிலை அறிதல் இன்றி வெற்றுச் சுலோகங்களுக்குள்ளால் பந்து விளையாடித் திருகிறது கூட்டமைப்பு. பதின்மூன்று - சமஸ்டி என அவர்கள் மாறி மாறி பேசுபவைகள் மக்களின் அபிலாசைகளை முழுமையாக பிரதிபலிப்பதாக அன்றி தேர்தலில் வாக்கு குவிக்கும் சூழ்சியாகவே இருக்கிறது. தமிழ்பேசும் மக்களுக்கு நிரந்தரத் தீர்வை பெற்றுத் தரும் திசையில் கூட்டமைப்பு நகரப் போவதில்லை என்பதை அதே கூட்டமைப்புக்குள் நெருங்கி வேலை செய்த முதலமைச்சரே சுட்டிக்காட்டும் பொழுது நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

கூட்டமைப்பு தலைமை எவ்வாறு இந்த விமர்சனங்களை எதிர்கொள்ளும் என முதலமைச்சர் எதிர்வு கூறியபடியே கூட்டமைப்பும் நடந்துகொள்கிறது. தேர்தல் முடிந்ததும் முதலமைச்சருடன் "பேச்சுவார்த்தை" நடத்தப்படும் என மிரட்டல் பாணியில் ஒரு அறிக்கை விட்டுள்ளார் திரு. சம்பந்தன். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பழசுக்கும் புதுசுக்கும் (மஹிந்தவுக்கும் மைத்திரிக்கும்) அதிகம் வித்தியாசம் இல்லை" -

## முதலமைச்சர் விக்கினேஸ்வரன்




"சாதனைகளுக்கு இடமில்லை!. என்னத்தை நாங்கள் சாதித்துவிட்டோம் என்று கேட்டால் எங்களுடைய கோரிக்கைகள் நியாயமானவையாக இருந்தால் அவருடைய (புதிய ஜனாதிபதி புதிய ஆளநர்) மனதிலே அது நியாயமானதாக இருந்து சட்ட திட்டங்களும் எங்களுக்கு அமைவாக இருந்தால், அந்த அளவுக்கு சாதித்து இருக்கின்றோம்" எனத் தெரிவித்த முதலமைச்சர் விக்கினேஸ்வரன் தன்னுடைய பதவிக் காலத்தில் நிகழ்த்தி முடித்ததாக இறுதிவரை எதனையும் குறிப்பிடவில்லை.

அமெரிக்க, பிரித்தானிய நாடுகளுக்கு பயணத்தை மேற்கொண்டிருந்த வட மாகாணசபை முதலமைச்சர் சி வி விக்கினேஸ்வரன் லண்டனில் சர்வதேச தமிழ் ஊடகவியலாளர் அமைப்பு ஏற்பாடு செய்த கூட்டத்தில் உரையாற்றியதுடன் தெரிவு செய்யப்பட்ட சில கேள்விகளுக்கும் பதிலளித்தார். அவற்றில் சிலவற்றை இங்கு தருகின்றோம்.

**கேள்வி:** *இனப்படுகொலைத் தீர்மானத்தை வட மாகாண சபையிலே கொண்டு வந்திருக்கிறீர்கள். அதேபோன்று அங்கு இருக்கக்கூடிய ஈழத்தமிழர்களுடைய சுயாதீனமான உரிமை குறித்த சர்வஜன வாக்கெடுப்பை சர்வதேச ரீதியாக கொண்டுவர வேண்டும் என்ற தீர்மானத்தை கொண்டு வருவீர்களா?*

**வமா முதலமைச்சர்:** நான்காம் மாடியில் வைத்து கேள்வி கேட்பது போல் இருக்கிறது. பரவாயில்லை. மக்களுடைய கருத்தைப் பெறுவதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்கிறீர்களா என்பதே அந்தக் கேள்வியின் சாரம்சம். மக்களின் கருத்துக்களை சர்வதேச நாடுகளின் அனுசரனையுடன் அதைச் செய்ய வேண்டும் அதற்கு நீங்கள் ஒத்துழைப்பு வழங்குவீர்களா என்ற கேள்வி. இதில் பலர் சேர்ந்திருக்கிறார்கள். பலரை நம்பி இருக்கின்றது அந்தக் கேள்வி. ஆகவே இது சர்வதேச ரீதியாக எடுக்கப்பட வேண்டிய ஒன்று. எங்களுடைய மண்ணிலே இதை எடுங்கள் என்று கூறுவதால் எந்தப் பலனும் இல்லை. அவர்கள் கூறுவார்கள் தேர்தல் நடைபெறுகிறது. அவர்களுக்கு தேவையானவற்றை தேர்தலில் மக்கள் எடுத்துக் காட்டுவாரகள் என்று அதைத் தட்டிக்கழிப்பார்கள்.

இதிலே இன்னுமொரு விடயத்தை நீங்கள் மனதிலே வைத்திருக்க வேண்டும். நாங்கள் மக்களுடைய எதிர்பார்ப்புகளை அவர்களுடைய அபிலாசைகளை அறிய வேண்டும் எனும் போது, இப்போது கிழக்கு மாகாணத்திலே முன்னர் நூற்றுக்கு 5 வீதமாக இருந்த சிங்கள மக்கள் தொகை சுமார் 32 வீதமாக உயர்ந்து உள்ளது. அத்துடன் எங்களுடைய முஸ்லீம் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பல விதமான வித்தியாசமான மாறுபட்ட கருத்துக்களையும் கொண்டிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் உள்ளடக்கித் தான் மக்களுடைய தீர்ப்பு என்ன என்பதைப் பற்றி நாங்கள் அறிந்து கொள்ளலாம்.

ஆகவே நீங்கள் குறிப்பிட்ட பிரேரணையைக் கொண்டு வருவீர்களா என்று கேட்கும் போது பல விடயங்களை ஆர அமர சிந்தித்துத் தான் செயலாற்ற வேண்டும். உடனே அதைச் செய்ய முடியும் என்றோ, முடியாது என்றோ என்னால் கூற முடியாது. இது சம்பந்தமாக நாங்கள் பரிசீலனைக்கு எடுப்போம். அதைப் பற்றி நாங்கள் சிந்திப்போம் என்பதை மட்டும் தான் நாங்கள் உங்களுக்கு இப்போதைக்குக் கூற முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேள்வி:** வட மாகாணசபையில் தாங்கள் முன்மொழிந்து ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட இனப் படுகொலை தொடர்பான தீர் மானத்தை வலுப்படுத்தும் வகையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் 2015 தேர்தல் விஞ்ஞாபனத்தில் இது இடம்பெறச் செய்ய நீங்கள் முயற்சிப்பீர்களா? அதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு இணங்காவிடில் தார்மீகமாக வெளிப்படையான ஆதரவு யாருக்கு இருக்கும் என்பதை தெரிவிப்பீர்களா?

**வமா முதலமைச்சர்:** தேர்தல் விஞ் ஞாபனத்திலே இது குறிப்பிடப் பட்டு இருக்கிறது என்பது எனது எண்ணம். எனது ஞாபகம். அதாவது மனிதப் படுகொலைகளுக்கு தமிழ் மக்கள் முகம்கொடுக்க வேண்டியது சம்பந்தமாக எங்கோ குறிப் பிடப்பட்டு உள்ளது என்பதாக எனக்கு நினைவு இருக்கிறது. தந்தை செல்வா கூட தன்னுடைய 1974 ம் ஆண்டு கொமன்வெல்த் கொன் பிரன்ஸ் நடக்கின்ற போது அங்கு வந்திருந்த பேராளர்களுக்கு அனுப் பிய மனு ஒன்றிலே இதைப் பற்றி அவர் குறிப்பிட்டு இருந்தார்.

இதை எங்களுடைய தேர்தல் விஞ்ஞாபனத்திலே உள்ளடக்க வேண்டும் என்று கேட்பதில் எதுவுமே பெரிய விடயமாக தெரியவில்லை ஏனென்றால் அதனுடைய சாரம்சம் ஏற்கனவே அதில் உள்ளடங்கி இருக்கிறது. ஆகவே அதைப்பற்றி நாங்கள் சிந்திக்க வேண்டிய அவசியமில்லை.

அது எங்களுடைய மக்கள் அனைவரும் அதாவது இரண்டு சிங்கள மக்கள், இரண்டு அல்லது மூன்று முஸ்லீம் மக்கள் சேர்ந்து ஏகோபித்து அந்தப் பிரேரணையை நாங்கள் கொண்டு வந்திருந்தோம். அந்த சிங்கள பிரதிநிதியிடம் எங் களுடைய உறுப்பினரிடம் அதை நான் கேட்ட போது அவர் கூறினார், இது பற்றி என்ன சிந்திக்க வேண்டி இருக்கிறது. தமிழ் மக்களுக்கு இப்பேர்ப்பட்ட நடவடிக்கைகள் நடந்தது உண்மை. இது முன்னர் நடந்தது தானே. ஆகவே இதிலே நாங்கள் சிந்திக்க வேண்டிய அவசியம் இல்லை. அதனால் நாங் கள் இதற்கு எங்களுடைய ஆதரவை வழங்குகிறோம் என்று கூறினார்.

ஆகவே அந்த அளவுக்கு மக் களிடையே எங்களுடைய உறுப் பினர்களிடையே இது ஒரு ஏற் கப்பட்ட விடயம்என்பதால்இதைப் பற்றி நாங்கள் எதுவும் கூற வேண்டிய அவசியமில்லை.

**கேள்வி:** ஆறாவது திருத்தச் சட்டம் பற்றி, ஆறாவது திருத்தச் சட்டம் சுதந்திரமாக பல விடயங்களைப் பேசுவதற்கான உரிமையை மறுக் கின்றது. அதனால் இலங்கையின் அரசியல் யாப்பில் இருந்து ஆறா வது திருத்தச்சட்டம் நீக்கப்படுவதற்கான முயற்சிகள் ஏதேனும் தமிழ் தரப்புகளினால் செய்யப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளதா? சட்டத்துறை நிபுணர் என்ற வகையில் அவ்வாறான ஒரு சூழல் உருவாகும் என்று நினைக் கிறீர்களா?

**வமா முதலமைச்சர்:** இப்போது அப்படிப்பட்ட ஒரு கோரிக்கையை விட முடியாது. தறபோதைய நிலைமை அப்படி. அடுத்தது தேர் தல் வர இருக்கிறது. தேர்தலிலே யார் யார் தேர்ந்தெடுக்கப்படுகி றார்கள் என்பதை வைத்து இது சம்பந்தமாக பரிசீலனை செய்ய லாம். தமிழ் மக்களுக்கு ஆதரவான பலர் சேர்ந்து வந்திருந்தால் இந்த ஆறாவது திருத்தச் சட்டம் தேவையற்ற ஒன்று அதனை இல்லாமற் செய்யுங்கள் வாபஸ் பெறுங்கள் என்று நாங்கள் கூறமுடியும். ஆனால் இப்பொழுது இருக்கும் நாட்டி னுடைய மக்களினுடைய சிந்தனைகள் என்ன? மனோநிலை என்ன? என்று தெரியாது என்னால் இந்தக் கேள்விக்கு என்னால் பதில் சொல்ல முடியாது.

**கேள்வி:** நீங்கள் முதலமைச்சாராக இருந்த காலப்பகுதி எவ்வாறு தமிழர் விடயம் பற்றிய உங்கள் பார்வையில் என்ன தாக்கத்தை ஏற்படுத்தியது?


**வமா முதலமைச்சர்:** கடந்த ஒன் றரை வருடங்களாக முதலமைச்ச ராக இருந்த காலம் எவ்வாறு தமி ழர் விடயம் பற்றிய எனது சிந் தனை செயன்முறையில் தாக் கத்தை ஏற்படுத்தியது என்று கேட் கிறீர்கள். நல்லது. இப்போது மிகத் தெளிவாகி உள்ளது. நான் கொழும்பில் இருந்தவன். பிறந்து வளர்ந்தது கொழும்பில். நான் பெரும்பாலும் நாட்டின் எல்லாம் பகுதிகளிலும் இருந்துள்ளேன். இதன் காரணமாக வேறுப்பட்ட கருத்துக்கள் ஒவ்வொன்றைப் பற் றியும் இருந்தது. அரசியல் பற் றியும். வட மாகாணத்திற்கு வந்த பிற்பாடு எப்பகுதிக்குச் சென்றாலும் மக்களோடு நாள்தோறும் கலந்துரையாடும் போதும் அவர் களுடைய குறைகளைக் கேட்கின்ற போதும் எனக்கு அவர்களுடைய கஸ்டங்களை அபிலாசைகளை விளங்கிக்கொள்ள புரிந்துகொள்ள முடிகிறது. இந்தக் காரணங்களால் நிச்சயமாக என்னுடைய வெளிப் பாட்டில் மாற்றம் ஏற்பட்டு உள் ளது.


இதனால் தான் நான் தமிழ் தலைவர்களுக்கு சொல்கிறேன், அவர்கள் கவனமாக இருக்க வேண் டும், சிங்கள கருத்தாக்கத்தை, சிங்கள அரசியல்வாதிகளை இணக்க முற்படுவதற்கு அவர்கள் தங் களை அனுமதிக்கக் கூடாது, அங்கு ஒரு சார்புநிலை நகர்வு ஏற்படு வதற்கான வாய்ப்பு உள்ளது. அவர் கள் கொழும்பில் இருக்கின்ற போது இயற்கையாகவே தங்களைச் சுற் றியுள்ள சிங்கள மக்களுடன் முரண்


**20ம் பக்கம் பார்க்க**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# வாக்குகள் சிதறுவது மட்டுமல்ல, வாக்களிக்கும் வீதமும் குறையும் நிலை – விஸ்வா

தமிழ் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டதன் பின்னர் இந்தத் தடவைதான் அது சிக்கலான ஒரு தேர்தல் களத்தை சந்திக்கின்றது. விடுதலைப்புலிகளின் காலத்தில், அவர்களால் உருவாக்கப்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்து வந்த எல்லாத் தேர்தல்களிலும் எவ்வித பிரச்சினைகளையும் எதிர்கொள்ளும் நிலைமைகள் இருக்கவில்லை.

போரின் பின்னர் வந்த தேர்தல்களிலும் பெரிய எதிர்ப்புக்களை கூட்டமைப்பு சந்திக்கவில்லை.

2010 ஆண்டு இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தல், அதன்பின்னர் வந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல், வடமாகாண சபை தேர்தல் என எல்லாவற்றிலும் பாரிய வெற்றிதான். சில வேளைகளில் தமிழ் தேசியக்கூட்டமைப்பினர் எதிர்பார்த்ததை விடவும் அதிக வாக்குகளை தமிழ் மக்கள் அள்ளி வழங்கியிருந்தனர்.

வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழர்கள் வாழும் பிரதேசங்கள் என்று பார்த்தாலும், வடக்கின் களமே தமிழ் தேசியக் கூட்டமைப்பின் இருப்பையும் ஆதிக்கத்தையும் வெளிப்படுத்துகின்றது. தமிழர் பிரச்சினைகள் குறித்து பேச்சுக்களை நடத்தும் சர்வதேச நாடுகளிகளின் பிரதிநிதிகள் கூட வடக்கையே முக்கிய மையமாகக் கொண்டு சந்திப்புகளை- பேச்சுக்களை நடத்தி வருகின்றனர். கிழக்கு மூன்று சமூகத்தினர் கலந்து வாழும் பிரதேசம் என்பதால், வடக்கிற்கு இந்த முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது என்பதை விளக்க வேண்டிய அவசியம் இல்லை.

இந்நிலையில், வடக்கில் கடந்த தேர்தல்களுக்கு எளிதாக முகம் கொடுத்த தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் இம்முறை கலக்கமான நிலையிலேயே உள்ளனர்.

முன்னைய தேர்தல்களில், இரண்டு தரப்பினரே எதிரெதிர் போட்டியாளர்களாக இருந்துள்ளனர். தமிழ் தேசியத்தை முன்னிறுத்தும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும், ஆளும் தரப்புடன் இணைந்து போட்டியிடும் ஈ.பி.டிபி மற்றும் தென்னிலங்கை கட்சிகள் என அவை காணப்பட்டன.

இன்று- எதிர்வரும் தேர்தலில், தமிழ் தேசியத்தை முன்னிறுத்தி மேலும் இரண்டு கட்சிகள் வந்துள்ளன. கடந்த தேர்தல்களில் ஒதுங்கியிருந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி- மற்றும், முன்னாள் போராளிகளைக் கொண்ட ஜனநாயக போராளிகள் கட்சி ஆகியன தமிழ் தேசியக் கூட்டமைப்பை கடுமையாக குற்றம்சாட்டியவாறு களத்தில் நிற்கின்றன.

இவ்விரு கட்சிகளும் வாக்குகளைப் பெறுவதில் தமிழ் தேசியக் கூட்டமைப்பை மிஞ்சும் என்று சொல்வதற்கில்லை எனினும், தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு முன்னர் கிடைத்த வாக்குகளை சிதறடிக்கும் நிலையை ஏற்படுத்தும் என்றே அரசியல் நோக்கர்கள் பலரும் எதிர்வு கூறுகின்றனர். தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்கும் அந்த அச்சம் இப்போது ஏற்பட்டுள்ளதை அவர்களின் தேர்தல் பரப்புரைகளிலிருந்து அவதானிக்க முடிகின்றது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனையும் அவருடன் இணைந்து செயற்படும் சுமந்திரனையும் கடுமையாக குற்றம் சாட்டும் வகையில் மக்கள் மத்தியில் பரப்புரைகளை மேற்கொண்டுள்ளனர்.

இறுதி யுத்தத்தில் இடம் பெற்ற மனித உரிமை மீறல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பில் ஒரு நியாயமான தீர்வு சர்வதேசத்திடமிருந்து வரவேண்டும் என்பதும், இறுதியுத்தத்தில் கொல்லப்பட்டவர்களுக்கான நீதி கிடைக்க வேண்டும் என்பதும், காணாமல் போனவர்களின் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு கிடைக்க வேண்டும்என்பதும் தமிழ்மக்களின் உணர்வுபூர்வமான எண்ணமும் எதிர்பார்ப்பும் ஆகும். தங்களுக்கு முழுமையான வாக்குகளை அளித்து பலப்படுத்தினால் அடுத்த ஆண்டில் இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுத் தருவோம் என தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் மக்களிடம் தெரிவித்து வருகின்றனர். அதனை விடவும், 2016இல் இனப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வைப் பெற்றுத் தருவோம் என்ற நடைமுறைச் சாத்தியமற்ற வாக்குறுதியையும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் மக்களிடம் தெரிவித்து வருகின்றனர்.

தமிழ்தேசியமக்கள்முன்னணியினர் இவற்றிற்கான எதிர்ப்பரப்புரையை கடுமையாகவே மேற்கொள்கின்றனர்.

ஐ.நாவின் விசாரணை அறிக்கையை தடுத்து நிறுத்தியதே தமிழ் தேசியக் கூட்டமைப்புத்தான் எனவும், அரசாங்கத்துடன் மறைமுக உறவுகளைப் பேணி தமிழ் தேசியக்கூட்டமைப்பு தமிழ் மக்களுக்கு துரோகம் செய்வதாகவும் அவர்கள் கூறுகின்றனர். ஊடகவியலாளர் ந.வித்தியாதரனை தலைமை வேட்பாளராகக் கொண்ட ஜனநாயக போராளிகள் கட்சியும் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு எதிராக மக்கள் மத்தியில் கருத்துக்களை காட்டமாகவே முன்வைத்து வருகின்றது.

விடுதலைப்புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் அவர்களுக்கு இடமளிக்க மறுப்பதும், இப்போது அவர்களையே சந்தேகத்துடன் பார்ப்பதும், அவர்களை காட்டிக் கொடுப்பவர்கள் என்று கூறுவதும் களத்தில் தங்கள் உயிர்களை தியாகம் செய்த போராளிகளையும், களத்தில் போராடிய ஏனைய முன்னாள் போராளிகளையும் கொச்சைப்படுத்துவதாக அமைந்துள்ளதென வித்தியாதரன் கூறுகின்றார். அவர் கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தனையும் மற்றும், மாவை சேனாதிராஜாவையும் விரல் நீட்டி குற்றம்சாட்டுகின்றார்.

இப்படி- இன்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு இருபக்க அடிகளை வாங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. தமிழ் தேசிய மக்கள் முன்னணியினருக்கும், ஜனநாயக போராளிகள் கட்சிக்கும் எந்தவித உடன்பாடோ அல்லது, ஒரு சுமுகமான உறவோ இல்லை எனினும், அக்கட்சியினர் ஒருவருக்கொருவர் எதிராக கருத்துக்கள் எதனையும் வெளியிடுவதில்லை. ஆனால், இரு கட்சிகளின் பொது எதிரியாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆகிவிட்டது. இரு பக்க அடிகளையும் வாங்கிக்கொண்டு தமக்கெதிரான இரு பக்க பரப்புரைகளுக்கும் பதில் சொல்ல வேண்டிய இக்கட்டான நிலை கூட்டமைப்பினருக்கு எற்பட்டுள்ளது.

இதனைவிடவும், தமிழ்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குறித்து கடுமையான விமர்சனங்களை முன்வைத்து வரும் வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனின் கருத்துக்களும் அவர்களுக்கு இப்போது பாதிப்பையே ஏற்படுத்தியுள்ளது. இன்று தமிழருக்கு தமிழரே எதிரியாகி விட்டனர் என்று மாவை சேனாதிராஜா அழாக் குறையாக வேதனைப்படுகின்றார்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கும், டக்ளஸ் தேவானந்தாவிற்கும் எவ்வித வித்தியாசமும் இல்லை என சுமந்திரன் சாடுகின்றார். தமிழ் மக்களை கொன்றழித்த மஹிந்த ராஜபக்ஸவை அகற்றி ஒரு ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற முடிவில் தமிழ் மக்கள் செயற்பட்டு அதில் வெற்றியும் அடைந்தனர். ஆனால், அவரை மீண்டும் ஜனாதிபதியாக்கும்முனைப்பில் டக்ளஸ்செயற்பட்டார். கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தேர்தலை பகிஸ்கரிக்குமாறு தமிழ் மக்களிடம் கோரி அதனை செய்படுத்த முனைந்தார் எனவே இருவரும் ஒரே ஆட்கள் தான் என்கிறார் அவர்.

இந்நிலையில், இம்முறை தங்கள்வீணைச்சின்னத்தில்போட்டியிடும் ஈபிடிபியினர் இந்த நிலைமைகளை உன்னிப்பாக அவதானித்த வண்ணம், பரப்புரைகளில் சற்று அடக்கி வாசிப்பதாகவே தெரிகின்றது. தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு கடந்த காலங்களில் கிடைத்த வாக்குகள் இம்முறை சிதைவடைவதை அவர்கள் விரும்புகின்றார்கள். தங்களுக்கு மக்கள் மத்தியில் புதிய ஆதரவாளர்கள் கிடைக்காவிட்டாலும் தங்களுக்கு ஏற்கனவே இருக்கும் வாக்கு வங்கியின் மூலம் இரண்டு ஆசனங்களாவது கிடைக்கும் என அவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

வாக்குகள் சிதறும் நிலையை எண்ணி தமிழ் தேசியக் கூட்டமைப்பு கவலைப்பட, அது சிதற வேண்டும்- அவர்களின் ஏகபோகத் தன்மைஇல்லாமல்போக வேண்டும் என ஏனைய கட்சிகள் விரும்பியிருக்க, தமிழ் மக்களின் எண்ண வோட்டம் எவ்வாறிருக்கின்றது என்று அவதானிக்கும் போது- அவர்கள் முன்னர் நடைபெற்ற தேர்தல் காலங்களில் காணப்பட்ட சுறுசுறுப்பான மனநிலையில் இல்லை என்றுதான் கூறமுடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த ஜனவரி மாதம் இடம் பெற்ற ஜனாதிபதி தேர்தல் வரை இருந்த மனநிலையில் அவர்கள் இல்லை. வரப்போகும் பாராளு மன்றத் தேர்தல் குறித்து அவர்கள் அதிக அக்கறை கொண்டுள்ளதாக தெரியவில்லை.

கடந்த ஜனாதிபதித் தேர்த லில் ஆட்சிமாற்றம் ஒன்று ஏற்பட வேண்டும் என்று தமிழ் மக்கள் தாங்களாகவே எண்ணி வாக்கு களை அளித்தனர். தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி மாற்றத்திற் காக வாக்களிக்க சொன்னதையோ, வாக்களிப்பை பகிஸ்கரிக்குமாறு சொன்னவர்களையோ கணக்கில் எடுக்காமல் தாங்களாகவே அவர் கள் தீர்மானம் எடுத்தனர் என்பது தான் உண்மை.

இம்முறை, யாருக்கு வாக்களித்தும் என்ன வரப்போகின் றது என்கின்ற விரக்தியான தொரு மனநிலையில் வடக்கிலுள்ள தமிழ் மக்கள் இருப்பதை காண முடிகின்றது. தேர்தலுக்கு இன்னும் சில நாட்களே உள்ள நிலை யில் முன்னரைப் போல் பாரிய தேர்தல் பரப்புரைக் கூட்டங்களை நடத்த முடியாத நிலையில், தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் சிறு சிறு கூட்டங்களையே நடத்தி வருகின்றனர். மக்கள் அந்த கூட்டங்களுக்கு கடந்த காலங் களைப் போல செல்வதையும் காண முடியவில்லை. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரை கூட்டங்களுக்கு மக்களை வர வழைக்கும்பணிகளைகுறிப்பாகபிர தேச சபை உறுப்பினர்களே மேற் கொண்டு வருகின்றனர். இன் றைய சூழ்நிலையில் தாங்கள் சிரமப் படுவதை அவர்களே ஒப்புக்கொள் கின்றனர்.

கடந்த ஐந்து வருடங்களில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் தமிழ் மக்களின் வாழ்வாதார நட வடிக்கைகள் தொடர்பில் எதனை யும் செயற்படுத்தவில்லை என்ற குற்றச்சாட்டை மக்கள் தற்போது முன்வைக்கின்றனர். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகையிலுள்ள வட மாகாண சபையும் கடந்த ஒன் றரை வருட காலத்தில் உருப் படியாக எதனையுமே செய்ய வில்லை என்பதையும், ஆட்சிமாற் றம் ஏற்பட்டு, அவர்கள் கேட்ட ஆளுநர் மாற்றமும் இடம் பெற்று எட்டுமாதங்கள் ஆகி விட்டபோதும் மக்களுக்கான செயற்பாடுகளில் எவ்வித மாற் றங்களும் ஏற்படவில்லை என் பதைமக்கள்உணரத்தொடங்கிவிட் டனர். அதனால் இம்முறை வடக் கில் மக்களின் வாக்களிப்பு வீதம் குறையும் நிலை ஏற்படலாம். வாக்கு கள் சிதறிப் போவதுடன் வாக்க ளிப்பு குறைவடைவதும் தமிழ் தேசி யக் கூட்டமைப்பிற்கு சிக்கலான நிலைமையினையே ஏற்படுத்தும்.

இவ்வாறுதான் இருக்கின்றது இன்று வடக்கின் தேர்தல் களம். ■

## பழசுக்கும் புதுசு...

**17ம் பக்கத் தொடர்ச்சி**

பட விரும்பமாட்டார்கள். தங்க ளோடு நல்ல உறவில் உள்ளவர்கள் சந்தோசம் அற்று இருப்பதையும் யாரும் விரும்பமாட்டார்கள். அத னால் எங்களை அறியாமலேயே எங்களுடைய கருத்துக்கள் வலுக் குறைக்கப்பட்டு விடும். இதன் விளைவுகளை அறியாமல், இதனை அரசியல் அரங்கிற்கு கொண்டு வரு கின்ற போது எங்களுடைய மக் களுடைய உணர்வுகளுக்கும் எதிர் காலத்துக்கும் மிகவும் கடுமையான தாக இருக்கும்.

கடந்த ஒன்றரை வருடங்கள் எனக்கு என்ன செய்தது என்று கேட் டால் என்னுடைய வெளிப் பாட்டை அது மாற்றி உள்ளது. என்னுடைய கொழும்பு வெளிப் பாட்டைஎன்னிடம்இருந்துஎடுத்து விட்டு, வடமாகாண வெளிப் பாட்டை தந்துள்ளது. இந்த மா காண வெளிப்பாடு அந்த மக் களில் தங்கி உள்ளது. என்னைச் சுற்றியுள்ள மக்களால் உருவாக் கப்பட்டு உள்ளது. அவர்களுடைய எதிர்பார்ப்புகள் வானளவு உயர மாக இருக்க நீங்கள் மிகச் சாதா ரணமாகி விடுவீர்கள். எங்களிடம் உள்ள அதிகாரங்களோ மிகக்குறைந் தவை. இவையெல்லாம் என்னை மாற்றியுள்ளது.


**கேள்வி:** தமிழ் தேசியக் கூட்ட மைப்பின் தலைமை மற்றும் சிலரு டைய கருத்தோடு உங்களுக்கு உடன்பாடில்லை என்று தெரிகிறது. மறுபுறம் உங்களின் கருத்துக்கள் எண்ணத்தோடு செயற்படும் பலரும் தாயகத்தில் இருக்கின்றார்கள். எந்தக்கட்சியிலும் உறுப்பினரல் லாத நீங்கள் தமிழ் தேசிய மக்கள் முன்னணியோடு இணைந்து செயற்பட வாய்ப்பு இருக்கின்றதா?

**வமா முதலமைச்சர்:** தமிழ் தேசி யக் கூட்டமைப்பு ஒரு ஜனநாய கக் கட்சி. எங்களிடையே கருத்து வேறுபாடுகள் இருப்பது தான் அந்தக் கட்சிக்கு அழகு. ஆகவே அந்த கருத்து வேறுபாடுகளை நாங்கள் கலந்துறவாக்கொண்டு வருகின்றோம். என்னுடைய கருத் துக்களை தலைவர் சம்பந்தன் அவர்களுக்கு எழுதி அவருடைய பதிலும் எனக்கு வந்தள்ளது. எங் களுக்கு உள்ளே பிரிவினைகள் எதுவும் இல்லை. ஆனால் பரஸ் பரம் எங்களுடைய கருத்து வேற்று மைகளை எந்த அளவுக்கு சரி, பிழை என்று ஒவ்வொருவரும் அவற் றைப் பரிசீலித்துப் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். ஆகவே தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இருந்து இன்னொரு கட்சியோடு சேரவேண்டும் என்ற அவசியம் எனக்கில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றத் தேர்தலும் (2015) தமிழ் மக்களும்



ஆகஸ்ட் 17ம் திகதி அன்று நடைபெறவிருக்கும் பாராளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ளத் தயாராக இருக்கும் இத்தருணததில் தமிழ்த்தரப்பு அரசியல் நலன்சார்ந்த நோக்கில் நாம் சிந்திக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இந்தத் தேர்தலில் பங்கேற்பதும் அல்லது பகிஷ்கரிப்பதும் என்ற நிலைப் பாடுகளுக்கு அப்பால் தேர்தலை முகங்கொடுப்பதற்கான விழிப் புணர்வு நமக்கு அவசியம்.

நாம் நீண்டகாலமாக பாராளுமன்ற அரசியலை நிராகரித்து வந்தவர்கள், இப்பொழுது நாம் பாராளுமன்ற அரசியலில் பங்கேற்கத் தயாராக இருக்கும் போது பல்வேறுபட்ட கேள்விகளை முன் வைத்து நாம்கடந்து செல்ல வேண்டியுள்ளது. தமிழ் தரப்பு அரசியல் மற்றும் இலங்கை அரசியல் தொடர்பில் அடிப்படையான சில விளக்கங்களையும் உருவாக்க வேண்டியுள்ளது. குறிப்பாக சில எண்ணக் கருக்கள் தொடர்பிலான நமது புரிதல்களை முதலில் குறித்துக்கொள்வோம்.

### இலங்கைத் தேசியம்

நடைமுறையில் 'இலங்கைத் தேசியம்' என்பது கிடையாது. இருக்கும் இலங்கைத் தேசியம் அல்லது கட்டமைக்கப்பட்ட தேசியம், சிங்கள பௌத்தர்களை மட்டுமே அடிப்படையாகக் குறுக்கிக் கொண்டது. இது சிங்கள பௌத்தர்கள் அல்லாதவர்களை உள்வாங்கத் தவறிவிட்டது. பல்லின, பல மத, பல மொழி, பல் கலாசாரத்தின் திரட்சிகளை, பன்மைத்துவத்தை அங்கீகரிக்கின்ற உணர்வு நிலைகளையும், சிந்தனைகளையும் மனப்பாங்கு நிலையையும் கொண்டிருக்கவில்லை. இதனால் இலங்கைத் தேசியம் சிங்கள பௌத்தர்கள் அல்லாத ஏனைய சமூகங்களை விலக்கி வைக்கின்ற, ஒடுக்குகின்ற அரசியலாகவும், கருத்தியலாகவும், சிந்தனையாகவுமே எழுச்சி பெற்றுள்ளது. ஆகவே நமக்கு இலங்கைத் தேசியம் தொடர்பில் ஆழமான புரிதலும் விளக்கமும் வேண்டும்.

### இலங்கை அரசு

இலங்கையில் நவீன அரசு உருவாக்கம் என்பது சிங்கள பௌத்த தேசியவாதத்தை பாதுகாக்கும் மறு உருவாக்கம் செய்யும் கருத்தியலிலிருந்தே உருவாக்கம் பெற்றது. ஏனைய சமூகங்களை ஒடுக்கி - நசுக்கி வருவதன் மூலமே தமது இருப்பை உறுதிப்படுத்தியிருக்கின்றது. இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையின் உருவாக்கத்திற்கும் தொடர்ந்து வரும் இந்த அரசே காரணமாக இருக்கின்றது. இலங்கை அரசின் இறுதி இலக்கு சிங்கள பௌத்த தேசியவாதத்தின் அரசியல் பண்பாட்டு நிகழ்ச்சி நிரலை நிறைவேற்றுவதில் தங்கியுள்ளது. இதில் உறுதியாகவும், தெளிவாகவும் உள்ளது.

### மேலும்...

காலத்துக்குக் காலம் இரு பேரினவாதக்கட்சிகளும் இனத்துவ அரசியல் அடையாளத்தை ஆதாரமாகக் கொண்டு இயங்கி வந்துள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளன. இலங்கையின் பாராளு மன்ற நடைமுறை ஒற்றையாட்சி யமைப்புக்குள் கட்டுண்டுள்ளது. இந்த பொறிமுறைகளுக்குள் நின்று அதிகாரப் பரவல் மற்றும் அதி காரப் பகிர்வுக்கு செல்ல முடி யாது. இதனால் தான் தமி ழர் பிரச்சினையை இதுவரை தீர்க்க முடியாதுள்ளது. பொது வாக இலங்கையில் இரண்டு முரண்பட்ட அரசு வடிவங் களும், ஒருங்கே சகவாழ்வு நடத்து கின்றன. அதாவது அரசியலமைப் புக்குட்பட்ட சனநாயகம் என்ற அரசு வடிவமும், சர்வாதிகார அரசு வடிவமும் இங்கே ஒருங்கே சீவிப்பதற்கான சமரசம் ஒன்றை செய்துகொண்டுள்ளது.

இதுவரை சர்வாதிகாரமும் பாராளுமன்ற சனநாயகமும் தூக்கி வீசப்பட வேண்டும் என்ற நிபந்த னையை எவரும் வற்புறுத்திய தில்லை. இதனை நாம் தெளிவா-கப் புரிந்துகொள்ள வேண்டும். அப்பொழுது தான் பாராளுமன்ற அரசியலின் உயிர்ப்பும் இருப்பும் அதன் வரையறைகளும் நமக்குத் தெரியவரும்.

### ஒற்றையாட்சி

1948 இல் இலங்கை சுதந்திர மடைந்த பின்னர் இலங்கையின் பின்னைக் காலனித்துவ உருவாக்க அரசியலில் வெளிப்பட்டுத் தெரிந்த முக்கிய இயல்பு இங்கு குறிப் பிடத்தக்கது. ஏனெனில், இக் காலத்தில் தான் தாராளவாத சன நாயக முறையின் அடிப்படையான நிறுவனங்களும் நடைமுறை களும் இலங்கையில் தடம் பதிக்க ஆரம்பித்தன. அத்தோடு இந்நிறு வனங்களும் நடைமுறைகளும் ஒற்றையாட்சி அரசியல் மாதி ரியை அடிப்படையாகக் கொண்டி ருந்தன. தமிழ்த் தரப்பு தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கை களுக்காகவும் உரிமைகளுக்காக வும் தமது போராட்டத்தை பாராளு மன்றத்திற்கு உள்ளேயும் வெளியே யும் சாத்தியமான அனைத்து வழி களிலும் முன்னெடுத்து வந்தது. ஆனால், இலங்கை அரசு இப் போராட்டத்தை வன்முறை கொண்டு நசுக்க ஆரம்பித்தது. இறு தியில் தமிழ் தரப்பு வேறு போராட்ட வழிமுறைகளில் ஈடுபட்டது. குறிப்பாக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட நிர்ப் பந்திக்கப்பட்டது.

### இனஅழிப்பு

பெரும் எதிர்பார்ப்புக்களு டன் முன்னெடுக்கப்பட்ட தமிழர் போராட்டம் பலரது தியாகங்களு டனும் அர்ப்பணிப்புக்களுடனும் வளர்ச்சி கண்டது. பின்னர் இப் போராட்டம் பன்னாட்டு அரச சக்திகளின் உதவியுடன் 2009 மே 18 அன்று முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. இச்சந்தர்ப்பததைப் பயன்படுத்தி மோசமான இன அழிப்பை சிங்கள பௌத்த பேரி-னவாத அரசு நடத்திமுடித்துள்ளது.

இந்த பின்புலத்தில் தான் பாராளுமன்றத் தேர்தல் 2015ஐ முகங்கொடுக்கின்றோம். உண்மை யில் தமிழ்த் தரப்பு எப்பொழுதும் பாராளுமன்ற அரசியலில் நம்பிக் கைக் கொண்டோ, பாராளு மன்றத்தில் ஆசனங்களை அதிக மாக்கிக் கொள்வதன் மூலமோ நமக்கான தீர்வை பெற்றுக்கொள்ள லாம் என்பதில் நம்பிக்கை கொண்டு வந்த சமூகம் அல்ல. ஆனால், இந்த வரலாற்று உண்மையைக் கூட புரிந்து கொள்ளாமல் தமிழ் வாக்காளர்களுக்கு வேண்டுகோள் விடுக்கும் அவலமும், முதிர்ச்சி யின்மையும் தற்போது ஏற் பட்டுள்ளது. இந்த மோசமான இன அழிப்புக்குப் பின்னர் தமிழ்த் தலைமை (த.தே.கூ) தனது அடுத்த கட்ட அரசியல் நகர்வுக்கு தம்மைத் தயார்படுத்த வேண்டியிருந்தது.

ஆனால், இந்தத் தமிழ்த் தலைமை இதற்குத் தன்னை தயார் படுத்தத் தவறிவிட்டது. இதுவரை யிலான தமிழ்த் தேசிய விடு தலைப் போராட்டத்தை மீளாய் வுக்கு உட்படுத்தவும் இல்லை. அரசியல் தவறுகள் இனங்காணப் படவுமில்லை. எதிர்கால திட்ட மிடல்களும் தொடங்கப்பட வில்லை.

### தமிழ்த் தரப்பினர்

தமிழ்த் தேசிய அரசியல் இருப்புக்கு தேர்தல் அரசியலைப் பயன்படுத்துவதன் மூலம் தமிழ்த் தேசிய அரசியலை நீர்த்துப் பே-ாகச் செய்து வருகின்றது. இன்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஆகிய இரண்டும் தமிழ்த் தேசிய அரசி யலை எவர் இம்மியும் பிசகாமல் முன்னெடுக்கின்றோம் என்பதில் போட்டா போட்டியாக உள்ளன.

வெற்றுக்கோஷங்களைஅலங் கார வார்த்தைகளை அதிகம் பயன்படுத்தி வாய்ச்சொல் வீரர் களாகத்தம்மைப்பிரகடனப்படுத்து கின்றனர். இந்தக் குறுகிய மலின மான அரசியலால் தமிழ்த் தேசிய அரசியலின் உயிர்ப்பு சாகடிக்கப் படுகின்றது. இன்றைய தேசிய இனப்பிரச்சினைக்கு நடைமுறையி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லுள்ள அரசியலமைப்பும் ஒரு காரணமாக அமைந்துள்ளது. இந்த அரசியலமைப்பு ஒருமைவாதத் தன்மை கொண்டது. இது சிங்கள - பௌத்த பேரினவாதத்தைப் பாதுகாக்கும் அரசியலமைப்பு. ஆகவே நடைமுறையிலுள்ள இந்த அரசியலமைப்பு மாற்றப்படாமல் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது.

**புதிய அரசியலமைப்பு**

உருவாக்கப்படும் புதிய அரசியலமைப்பு பன்மைப் பண்புடன் கூடியதாக அமைய வேண்டும். சமூக சனநாயகம், சமூக சமத்துவம், சமூக நீதி ஆகிய உயரிய நோக்கங்களின் அடிப்படையில் இது உருவாக்கப்பட வேண்டும். எந்த மக்களுக்கு இந்த அரசியலமைப்பு பாதிப்புக்களை உருவாக்கியதோ அந்த மக்களின் உணர்வுகளும் சிந்தனைகளும் உள்வாங்கப்பட வேண்டும். இத்தகைய புதிய அரசியலமைப்பின் தேவை உணரப்படவில்லை. இதனால் தேசிய இனப்பிரச்சினைக்கு சாத்தியமான தீர்வுகள் பற்றிய கலந்துரையாடல் விரிவாக்கம் பெறவில்லை. குறிப்பாக சமஷ்டி அடிப்படையிலான தீர்வுகள் நோக்கிய கலந்துரையாடலுக்கான களம் திறக்கப்பட வேண்டுமானால் புதிய அரசியலமைப்புப் பற்றிய சிந்தனை முதன்மைபடுத்தப்பட வேண்டும்.

ஆனால், இதுவரை தமிழ்த் தலைமைகள் அரசியலமைப்பு மாற்றம் குறித்த கோரிக்கையை முன்வைத்து ஆரம்பப் போராட்டத்தைக் கூட தொடங்கவில்லை. அப்படியானால் வடக்கு கிழக்கு இணைந்த சமஷ்டிக் கோரிக்கை வெற்றுக் கோஷமாகவே அமையும்.

**நமது எதிர்காலம்!**

ஆகவே, இந்த விளக்கங்களையும் புரிதல்களையும் நாம் விளங்கிக் கொண்டுதான் நாம் தேர்தல் அரசியலில் பங்குகொள்ள வேண்டும். அப்பொழுதுதான் நமக்கான அடுத்த கட்ட தெரிவு சுதந்திரமாகவும், அரசியலில் சார்ந்ததாகவும் அமையும். நமக்கு எதிர்காலம் சுபீட்சமாக அமையும். மேலும் தமிழ்த் தரப்பு அரசியலை ஆரோக்கியமாக முன்னெடுக்கவும், அதனை ஆராயவும் பற்றுறுதியுடன் தொடர்ந்து நாம் செயல்படவும் நம்மைத் தேசியமாக முன்னிறுத்துவதும் அதன் நலன்களிலிருந்து தீர்மானங்களை எடுப்பதும் அவசியமாகின்றது. நாம் சிந்திப்பதும் கலந்துரையாடுவதும் தமது சமூகத்தின் தலைவிதியை இன்னும் ஆரோக்கியமாக முன்னெடுப்பதற்குத் தான்.

நாம் சிந்திப்போம்..! நாம் செயல்படுவோம்...!


■

**தமிழ் நோக்கு-**
தேசியத்துக்கான கருத்தாடல் குழு.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 2016 இல் தீர்வு எட்டாவிட்டால் 2016 டிசெம்பர் 31 இல் த.தே.கூ எம்.பிக்கள் பதவி விலக வேண்டும் என்கிறார் வித்தியாதரன்

**- வித்தியா**

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் 2016 இல் தமிழ் மக்களுடைய பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்று சொல்வது "மந்திரத்தால் மாங்காய் பிடுங்குவதற்கு ஒப்பானது" என ஜனநாயகப் போராளிகள் அமைப்பின் முதன்மை வேட்பாளர் என். வித்தியாதரன் குற்றம்சாட்டி உள்ளார்.

"தென்னிலங்கை அரசியல் பிளவுபட்டு உள்ளது. மூன்றில் இரண்டு பெரும்பான்மை எடுப்பதற்கான சத்தியக்கூறே இல்லாத நிலையில்ஒருபழுத்தஅரசியல்வாதி எப்படி இந்த வாக்குறுதியைக் கொடுக்கிறார்? நான் அவருக்கு ஒரு சவால் விடுகிறேன். 2016இல் தீர்வு என்று சொன்ன ஐயா, 2016 டிசம்பர் 31 இற்குள் தீர்வு காணப்படாவிட்டால் தமிழ் தேசியக்கூட்டமைப்பில் இருந்து தெரிவாகின்ற எல்லா எம்.பிக்களையும் ராஜநாமாச்செய்து வேறொருதரப்புக்கு இடம்கொடுப்பாரா?" என வித்தியாதரன் சவால் வீடுத்து உள்ளார்.

"சேற்றை அகற்ற வேண்டும் என்றால்சேற்றுக்குள்இறங்கித்தான் அதைச். செய்ய வேண்டும்" என்று குறிப்பிட்ட வித்தியாதரன், எந்தப் போராளிகளால்இந்ததமிழ்தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டதோ அந்தப் போராளிகளை உளவாளிகள், கைக்கூலிகள் என்றெல்லாம் இரா சம்பந்தன், மாவை சேனாதிராஜா, எஸ். சிறீதரன் போன்றவர்கள் கொச்சைப்படுத்துவது மனவருத்தமளிப்பதாகத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், அரசாங்கத்துடன் சேர்ந்து விடுதலைப் புலிகளை அழித்தவர்களெல்லாம்- ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக வரவேண்டும் என்று எதிர்ப் போராட்டம் நடத்தியவர்கள் எல்லாம் புலிகள் உருவாக்கிய கூட்டமைப்பில் (ரெலோ, ஈபிஆர்எல்எப், புளொட்). இந்தப் போராளிகளை இரா. சம்பந்தன், மாவை சேனாதிராஜா, செல்வம் அடைக்கலநாதன், சுரேஸ் பிரேமச்சந்திரன், சித்தார்த்தன் எல்லாம் இராணுவ உளவாளிகள் என்ற அளவுக்கு கதைத்தார்கள் இவர்களில் எத்தனை பேர் அந்த வேலையைச் செய்தவர்கள்?

இந்த ஜனநாயக் போராளிகளுக்கு குறிப்பான பிரச்சினைகள் உள்ளது எனச் சுட்டிக்காட்டிய என். வித்தியாதரன் இத்தேர்தலில் ஆசனத்தை வென்றால் என்ன, வெல்லாவிட்டால் என்ன இந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு வேடதாரிகளை அம்பலப்படுத்தி இருக்கிறோம் எனத் தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தலிலும் இப்போராளிகளுக்கு உரிய இடம் வழங்கப்படவில்லை எனக்குற்றம் சாட்டிய என். வித்தியாதரன் "மாவை சேனாதிராஜா அவர்கள் மாகாணசபைத் தேர்தலில் உண்மையாக இந்த மக்களோடு நின்றவர்கள் யார்? யார் உண்மையாக இந்த மக்களுக்கு சேவையாற்றக் கூடியவர்கள்? திறமையுள்ளவர்கள் என்று பார்க்கவில்லை. அவர் பார்த்தது எல்லாம் சொல்வதற்கு வாய்க்கூச்சமான விவகாரம்" எனக் குறிப்பிட்டார்.

மூத்த ஊடகவியலாளரான என். வித்தியாதரன் தமிழரசுக் கட்சியின் கொழும்பு கிளையின் செயலாளராகவும் பணியாற்றியவர். யுத்த முடிவுக்குப் பின் வட மாகாண சபையின் முதல்வராக தமிழரசுக் கட்சியால் முன்னிலைப்படுத்தப்பட்டு வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

என். வித்தியாதரன் கிழக்கில் திருமலையைத் தளமாகக் கொண்டவர். தற்போது திருகோணமலையில் இரா. சம்பந்தனின் மாவட்டத்தில் காணாமல் போனவர்களின் உறவினர்கள் தேர்தலைப் புறக்கணிக்கப் போவதாக குறிப்பிட்டு உள்ளனர்.

2015 பாராளுமன்றத் தேர்தலில் சுயேட்சையாகப் போட்டியிடுகின்ற ஜனநாயக் போராளிகள் கட்சியும், தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வாக்கு வங்கியை நேரடியாகவே குறி வைத்துள்ளனர். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வரலாற்றில் முதற்தடவையாக அது இவ்வாறான ஒரு நெருக்கடிக்கு முகம்கொடுத்து நிற்கின்றது. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் களமும் (2015) தமிழர் தரப்பும்!

– யோகா-ராஜன்



19.07.2015 அன்று, பிபிசி தமிழோசையில் ஆகஸ்ட் 17இல் நடைபெறப்போகும் தேர்தலில் மக்களின் எதிர்பார்ப்புக் குறித்த கேள்விக்கான பதில் இவ்விதமாக எதிரொலித்தது!

ஆண்குரல் ஒன்று: "பொருளாதார முன்னேற்றம் முக்கியமானது. அதன் பொருட்டு காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை, ஆனையிறவு உப்பளம், பரந்தன் இரசாயனத்தொழிற்சாலை ஆகியவை மீள்இயக்கம்பெறவேண்டும். இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புக்களை அதிகரிக்க வேண்டும். அத்தியாவசியப் பொருட்களின் விலை குறைக்கப்பட வேண்டும்"

பெண்ணொருவர்: "போர் முடிந்து 6 வருடங்களாகியும் காணாமல் போன எங்கள் உறவுகளுக்கு முடிவில்லாமல் இருக்கிறது. அவர்களைக் கண்டுபிடித்துத் தரவேணும். வீட்டுத்திட்டத்தை முடித்துத் தரவேணும். இராணுவத்தால் சுவீகரிக்கப்பட்ட காணிகளை மீட்டுத் தரவேண்டும்"

இன்னொரு ஆண்: "ஏ9 பாதையில் 6வருடமாக இருக்கிறம். இன்றுவரை மின்சாரம் கிடையாது. சரியான பாதை இல்லை. எங்கடை அதிகாரிகளும் அரசாங்கமும்தான் இதுக்குப் பொறுப்பு! அரசியல்வாதிகள் மக்களுக்காகச் சாதிச்சது ஒண்டுமில்லை. கூட்டமைப்பு எதிர்க்கட்சி வரை போயிருக்கு, ஆனால் மக்களுக்காக சாதிச்சது ஒண்டுமில்லை. இனப்பிரச்சினைக்கும் ஒரு தீர்வு வேணும். அதுவும் கட்டாயந்தான்"

மீண்டும் ஒரு பெண்குரல்: "அப்பாவிகளை விடுதலை செய்ய வேணும். காணாமல் போனவையைக் கண்டுபிடிச்சுத் தரவேணும். குறிப்பிட்ட சில தொகை இருக்கெண்டு அரசாங்கம் சொல்லியிருக்கு. அதையாவது அரசாங்கம் வெளியில விடவேணும்!"

ஓர் இளைஞன் குரல்: "நில ஆக்கிரமிப்புப் பிரச்சனை, அரசியல் கைதிகள் பிரச்சனை, அன்றாடத் தேவைகள். இதைப் பூர்த்தி செய்யக்கூடியவர்களை அனுப்ப யோசிக்கிறம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பலதடவை சென்றபோதும் எதுவும் நிகழவில்லை த.தே.கூட்டமைப்பு எந்த நடவடிக்கையும் செய்யவில்லை"

இவற்றில் அதி அழுத்தத்துக்குட்பட்டவை பொருளாதாரப் பிரச்சினைகளுடன்கூடிய அன்றாட வாழ்வாதாரப் பிரச்சனைகளே! இதில் வேலைவாய்ப்புக்கான முன்னெடுப்புக்களும் அடக்கம். அதற்கு அடுத்ததாக தாய்மார்களின் குரலாக ஒலித்த காணாமல் போனவர்கள் மற்றும் சிறைக் கைதிகள் பிரச்சினைகள் முக்கியத்துவம் பெறுகின்றன! இனப்பிரச்சனைக்கான தீர்வு குறித்தும் பிரஸ்தாபிக்கப்பட்டது. ஆனால் அதிஅழுத்தத்துக்கு உட்பட்டிருக்கவில்லை என்பது வாஸ்தவமே!

தனிமனிதக்குரல்களாகஇருப்பதனால் அவை நிதானமாக ஒலிக்கின்றன. நாடாளுமன்றப் பிரதிநிதிகளால் இலகுவில் சாதிக்கக்கூடிய வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்கும், கைதிகள், காணாமல்போனவர்கள் குறித்தும் அதிகமாகப் மொழிகின்றன. இதுவே கூட்டமாக அல்லது கும்பலாக மாறுகின்ற போது அரசியல்வாதிகளின் குரலாக ஒலிப்பது தமிழுக்கு ஒன்றும் புதிதல்ல. அச்சந்தர்ப்பங்களில் மக்கள் பரிதாபத்துக்குரியவர்களாக மாறுகிறார்கள்! தன்னிலையை இழந்துவிடுகிறார்! அரசியல்வாதிகளின் நீரோட்டத்தில் அள்ளுப்பட்டுவிடுகிறார்கள். தமிழர் வரலாறு மட்டுமல்ல உலக அரசியல் வரலாறு அனைத்துமே இதற்குச் சான்று!

உண்மையில் தனிமனித ரீதியில் ஒவ்வொரு தமிழனுக்கும் விளங்குகிறது. கடந்த 60ஆண்டு கால அனுபவத்தில்முதல்30ஆண்டு கால நாடாளுமன்ற அரசியலிலும், அடுத்துவந்த 30ஆண்டுகால வன்முறை அரசியலிலும் தீர்க்கப்படாத இனப்பிரச்சனைக்கு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து வரும் 5ஆண்டுகால நாடாளுமன்ற வாழ்வுக்குள் எத் தகைய தீர்வையும் எட்டிவிட முடி யாது என்று!

இந்நிலையில், தமிழ் அரசியல்வாதிகள் முன்வைக்கக் கூடிய தர்க்கம் "அன்றைய சூழல் வேறு, இன்றைய சூழல் வேறு. இன்று எமது பிரச்சினை உலகளா வியது. சர்வதேச அனுசரணைக்கு உட்பட்டது" என்று! ஆனால், சர்வதேச அரங்கில் உரையாடு வதற்குரிய தமிழரின் அரசியல் ஆற்றுகையில் இன்னும் மாற்றம் ஏற்பட்டுவிடவில்லை.

இந்நிலைமைகளில் புதிய மந்தையில் பழைய கள்ளை ஊற்று வது போல் சில முன்னெடுப் புக்களைத் தோற்றுவிக்க முனைகி றார்கள் சில தமிழ் புத்திஜீவிகள். அதில் குறிப்பானவர் நிலாந் தன். வித்தியாதரனையும் குறிப்பிட லாம். ஆனால் அவருடைய செயற்பாடுகள் இலகுவில் கண்டு கொள்ளுமளவுக்கு அதிகாரத்துவ நோக்கம் கொண்டது! தன்ன லம் நிறைந்தது! ஆனால் நிலாந் தனின் நோக்கம் மெல்ல நகர்ந்து சாதிப்பது. அறிவதிகாரத்தின் மூலம் புலம்பெயர்ந்த தமிழர்கள், புத்தி ஜீவிகள் மற்றும் புதிய தலை முறை உறவுகளிடத்தும் ஆளுமை செலுத்த முனைவது. பொதுநல நோக்கில் மிகுந்த விமர்சனத்துக்கு உள்ளாக்கப்படவேண்டியது!

***மென்முறை அரசியல் என்பது உரையாடலை அடிப்படை யாகக் கொண்டது! பேரம் பேசுவதையல்ல.***

நிலாந்தனை காணும் வாய்ப்பு இருமுறை ஏற்பட்டது. ஒன்று, யாழ்ப்பாணத்தில் யோ.கர்ணனின் 'சேகுவேரா இருந்த வீடு' நூல் வெளியீட்டின் போது. மற்றது ஒரு சில மாதங்களுகளுக்கு முன் சுவிஸ் வந்தபோது. மற்றும் வன்சக்தி, மென்சக்தி எனும் கருத்தாக்கத்தை முன்வைக்கும் அவரது யூ ரியூப் பதிவையும் அவதானிக்க முடிந் தது. அவர் சுவிசுக்கு வந்ததன் நோக்கில் ஒன்று, புலிகள் முன்பு நடைமுறைப்படுத்தியது போன்ற தமிழர்க்கான ஒரு நிதிவைப்பகக் கட்டமைப்பை உருவாக்குதல் அல்லது அதற்கான கருத்துருக் களை விதைத்துவிட்டுச் செல்லல். இன்னொன்று புலம்பெயர் நாடுக- ளில் வாழும் இரண்டாவது தலை முறை இளையோர்களை தமிழ்த் தேசிய உணர்வோடு தக்கவைப் பதற்கு முனைவது. கலை இலக்கிய அரசியல் சார்ந்து நன்கு அறியப்பட்ட நண்பர் ஒருவர் இதை மறுதலிப்பது போல கூறிய வார்த்தை "எனது பிள்ளைகளுக்குக் கூட அத்தகைய உணர்வில்லை" என்பது.

மேலும் இலங்கையின் இனப் பிரச்சினையில் மாறி மாறி வரும் சிங்கள அரசுகள் கடும்போக்கைக் கடைப்பிடிப்பதற்கான காரணங் களில் ஒன்று இந்தியத் தமிழரின் சனத்தொகை மீதான அச்சம். இது சகலரும் அறிந்த ஒன்று. இந் நிலையில் இவ்வித அச்சத்தைப் போக்கும் வகையில் இலங்கைத் தமிழரின் செயற்பாட்டில் ஏற்பட வேண்டிய மாற்றம் குறித்து நிலாந்தனிடம் கேட்கப்பட்ட போது அவரது பதில் இப்படியாக அமைந்தது. "அது சிங்களவருடைய பிரச்சினை, அதற்கு நாம் ஒன்றும் செய்யத் தேவையில்லை" என்று!

இது பொறுப்பான விமர் சகருக்குரிய பதிலல்ல. நிலாந்தனி டமிருந்து எதிர்பார்த்திருக்கவு மில்லை. நிலாந்தன், மென்சக்தி அரசியல் பற்றி அதிகம் உரையாற்றி வருகிறார். மிக நல்ல விசயம். ஆனால் அவரது உணர்வுகளும் உடலசைவுகளும் (body language) இன்னும் வன்முறையின் இன் னொரு வடிவத்தையே வெளிப் படுத்துகின்றன.

மன்னிக்கவும், இச்சந்தர்ப்பத் தில் எமது பழைய நடைமுறைகள் சில நினைவுக்கு வருகின்றன. நாம் ஆரம்ப கால முப்பது ஆண்டுகளும் அதாவது, கறுப்புக்கொடி காட்டு தல், சத்தியாக்கிரகம், உண்ணா விரதம் என்று அகிம்சைப் வழிப் போராட்டங்களை மேற்கொண்ட போதும், எமது தலைவர்களின் பேச்சுக்கள் பலவும் வீர வசனங் களைக் கொண்ட இனவாதத் தூ ண்டல்களாக அமைந்தன. காசி ஆனந்தன் பல தடவைகள் இன வாதம் சார்ந்து சிங்கள மொழியை கொச்சைப்படுத்தும் வகையில் நண்டுக்கால் மொழி என்று வர்ணித்ததை மறக்க முடியா மலிருக்கிறது. அன்றைய அத்த கைய முறைமைகளில் இருந்து மிகச் சிறிய அளவில் வேறுபட்ட, அதே வடிவத்தின் தொடர்ச்சியாக முன்வைக்கப்படும் ஒரு சொல்லா டலாக நிலாந்தனின் மென்சக்தி இருந்துவிடக்கூடாது..

மேலும் நிலாந்தனின் இனப் பிரச்சனைத் தீர்வுக்கான வழிமுறை என்பது பேரம்பேசுதலை அடிப் படையாகக் கொண்டிருக்கிறது. புலிகள் ஆயுத பலத்தையும் இராணுவ நடவடிக்கைகளையும் அடிப்படையாக வைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரம் பேசும் அரசியலை நகர்த்தினார்கள். விளைவு அவர்கள் நினைத்ததற்கு நேர் எதிர்மாறாகவே முடிந்தது! நிலாந்தனின் பேரம் பேசல் என்பது மக்களை அணி திரட்டிய கிளர்ச்சியின் ஊடாக சர்வதேசத்தை ஈர்ப்பது. அடிப் படையில் புலிகளின் வழியில் சர்வ தேசத்தை மையப்படுத்திய வழி முறையைத்தான் நிலாந்தனும் நிலை நாட்ட முனைகிறார்.

இலங்கை அரசியல் சாச னத்தில் "சிறுபான்மை இனங்கள் பிரிந்து செல்வதற்கான உரிமை யுடன் கூடிய சுயநிர்ணய உரி மைக்கு உரித்தானவர்கள்" என்பதை உறுதிப்படுத்தும் சட்டம் ஒன்று சேர்க்கப்படவேண்டும் என்பது நீதி யானதும் நியாயமானதுமான ஓர் அடிப்படை ஜனநாயக உரிமை! ஆனால் அவற்றை அடையும் வழி என்பது இன்றைய தமிழ் சிங்கள அரசியல் தலைமைகளால் சாதிக்கக் கூடிய அளவில் இல்லை என்பது வெளிப்படை.

இலங்கையில் பெரும்பான் மைச் சிங்களத் தீவிர தேசியத்தின் அடாவடித்தனங்களும் அரசாங்கங் களின் அசட்டுத்தனங்களுமே தமிழ்த் தேசியத்தின் பிறப்புக்கு மருத்துவிச்சியாக அமைந்தன என் பதை மறுத்துவிட முடியாது! அதற்கு கால்கோலாக அமைந்தது அநகாரிக தர்மபாலாவின் பௌத்த மையவாதக் கொள்கை. இந்திய தமிழ் மன்னர்களின் ஆளுகைக்குள் இலங்கை உட்பட்டிருந்தமையும், இந்தியத் தமிழர்களின் அதிகரித்த சனத்தொகையும் மற்றும், உலகி லேயே சிறுபான்மைச் சமூகங் களின் வரிசையில் கீழ் நிலையில் சிங்கள இனம் இருப்பதுவும் அத னால் ஏற்பட்ட உளவியல் ரீதி யான அச்சமுமே அநகாரிக தர்மபாலாவின் பௌத்த மைய வாதக் கொள்கைக்கு அடிக்கல்லாக அமைந்தது என்பது அறிஞர்கள் பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று! இவ்வித அச்சம் சிங்கள சமூகத்திடம் கூட்டுளவியல் அடிப் படையில் இன்றும் பின்தொடரும் நிலையில் இனப்பிரச்சினைக்கான தீர்வை நோக்கிய பயணத்தில் தமிழர்கள் சிந்திக்கவேண்டிய மையப்புள்ளிகளில் இதுவும் ஒன்றே!

இதுவே, பிற்காலத்தில் சிங்கள அதிகார சக்திகளினதும், அரசியல்வாதிகளினதும் குழந் தையாக இனவாதம்; பிறப் பெடுக்க காரணமாயிற்று. மேலும், அரசியல்வாதிகளினதும், அதி- கார சக்திகளினதும், மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங் கங்களினதும் இருப்புக்கான போட்டிகளில் இக்குழந்தை ஊட்டச்சத்துடன் கூடிய பலம் பொருந்திய அரக்கப் பிள்ளையாக் வளர்ச்சிபெற்றது! சிங்கள அரசியல் தலைமைகளும், ஆட்சியாளர்களும் இனவாதத்தை நடைமுறையில் வெளிப்படுத்திய அளவுக்கு சமனாக இல்லாவிட்டாலும், இனவாதத் தைக் கக்கி நாடாளுமன்ற ஆசனங் களைப் கைப்பற்றும் நடை முறை தமிழ்த் தரப்பிலும் வேர் ஊன்றியதை மறுத்துவிட முடி யாது.

அரசியல் தலைவர்கள் என்பவர்கள் யார்? உலக ரீதியி லும் சரி, இலங்கையிலும் சரி பொதுவாக மக்களின் அனுமதி யுடன் மக்கள் மீது அதிகாரம் செலுத்தும் பொறிமுறைகளை விளங்கிக் கொண்டவர்களே அர சியல் தலைவர்கள் ஆகின் றனர். நாடாளுமன்ற ஆசனங் களை மையப்படுத்தும் அரசியல் வாதிகளுக்கும், போராட்டத் தலை மைகளுக்கும் கூட இது பொருந் தும். (மக்களின் மீது உண்மை யான அக்கறைகொண்ட, கிடைக் கப்பெற்ற அதிகாரம்மிக்க உயர் பதவியையும் துறந்துவிட்டு தனது லட்சித்துக்காக தொடர்ந்து பய ணித்த, 'சே குவேரா" போன்ற ஒருசில புரட்சித் தலைவர்கள் நீங்கலாக.)

அவ்வகையில் சிங்கள சமூ கத்தில் பெரும் சொத்துக்களுக்கு உரித்துடையவர்களாகவும், கல்விய திகாரத்தில் மேல்நிலையில் இருந்த வர்களுமான டி.எஸ் சேனநாயக்கா, டட்லி சேனநாயக்கா, மற் றும் எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டார நாயக்கா போன்றவர்கள் ஆட்சியதி காரத்தைக் கைப்பற்றியதில் வியப் பேதுமில்லை. ஒரே உறையில் இரு கத்திகள் இருக்க முடியாது என்பதுபோல ஆரம்பத்தில் ஒரே கட்சியில் -யூ.என்.பி- இருந்த அதிகார சக்திகள் இரண்டாகப் பிரிந்தனர். பண்டாரநாயக்கா யூ.என்.பியில் இருந்து வெளி- யேறி சிறீலங்கா சுதந்திரக் கட்சி யைத் தோற்றுவித்தார். இரு கட்சி களுக்குமிடையே கொள்கை வேறு பாடிருந்த போதும் இனப்பிரச் சனைத் தீர்வில் இரு தரப்பும் அதிகமான அளவுக்கு ஒரே நிலைப்பாட்டையே கொண்டிருந் தன.

தமிழ்க் கட்சிகளின் அர சியல் பயணமும் சிங்கள அரசி யல்வாதிகளின் வழியிலிருந்து பேரளவில் வேறுபட்டிருக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை! பொருளாதார வலிமையுடன் அன்றைய காலத்தில் லண்டனில் படித்து, சட்டத்துறையில் கியூசி பட்டத்தைப் பெற்றவர்களான ஜீ.ஜீ பொன்னம்பலம், எஸ்.ஜே.வி. செல்வநாயகம் ஆகியோரது ஆரம்பக் கட்சி தமிழ் காங்கிரஸ் ஆகவே இருந்தது. இரு அதிகார சக்திகள் ஓர் உறையில் இருக்க முடியாது என்பதை இவர்களும் நிரூபித்தனர். 1949ல் யூ.என்.பி அரசில் பொன்னம்பலம் அமைச்சராக இருந்தபோது மலையகத் தமிழரின் வாக்குரிமை பறிக்கப்பட்டது. இதைச் சாட்டாக வைத்து காங்கிரசில் இருந்து பிரிந்தார் செல்வநாயகம். செல்வநாயகம் போன்றவர்கள் காங்கிரஸ் கட்சியில் இருந்து வெளியேறிய போதும் மலையக மக்களுக்கு ஆதரவாக, 10 லட்சம் மலையகத் தமிழர்களின் உணர்வலைகளை வெளிப்படுத்தும் விதமாக யூ.என்.பி அரசுக்கு எதிராக ஒரு சிறு எதிர்ப்பைக்கூட வெளிப்படுத்தியிருக்கவில்லை. இவ்விடத்தில் 'சாட்டாக வைத்து' என்ற பதம் மிகச் சரியானதே!

பொன்னம்பலத்தின் தமிழ் காங்கிரஸ் கட்சி ஆறுமுக நாவலரின் சாதீய இந்துத்துவப் பிழிவுகளின் வெள்ளாளரியத்தை பிரநிதித்துவப்படுத்தியது. அத்தகைய பிற்போக்குத்தனத்தின் குறியீடாக இருக்கக்கூடிய சைக்கிள், இன்று மீண்டும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேர்தல் சின்னமாக கொடிகளில் பறப்பது, தமிழரின் சிந்தனையில் ஏற்பட்ட தேய்மானத்தின் அடையாளமே! அதுமட்டுமல்ல, யாழ்ப்பாண மக்களின் ஒருநாள் வாழ்வு எப்படி இருக்கும் என்பதை கனவில்கூட நினைத்துப்பார்க்கும் அளவுக்கு மக்களின் வாழ்வியல் சூழலை அறியாத, அறிய முனைப்பட்டிருக்காத ஒருவர்தான் பேரக்குழந்தை கஜேந்திரகுமார்! அவர் தாத்தா பொன்னம்பலத்தின் அதிகாரத்துவ பீடத்தை மீண்டும் நிறுவ முனைகிறார்.

பொன்னம்பலத்தின் தமிழ் காங்கரஸ் பழைமைவாதப் படுபிற்போக்குத்தனத்தின் இருப்பிடமாக ஒருபுறமிருக்கப் படித்து உத்தியோகம் பார்க்கின்ற மத்தியதர வர்க்கத்தினரை கவரும் வகையில் ஒரு சில சீர்திருத்தங்களுடன் கூடிய 'முற்போக்குக்" கட்சியொன்றை ஆரம்பித்தார் செல்வநாயகம். அவர் ஆரம்பித்த கட்சியின் பெயர் ஆங்கிலத்தில் 'சமஷ்டி" என்றும், தமிழில் 'தமிழரசுக் கட்சி" என்றும் அழைக்கப்பட்டது. பிற்காலத்தில் 'ஈழத்துக் காந்தி' என்று அழைக்கப்பட்ட செல்வநாயகத்தின் ஆரம்பமே வன்முறைக்குட்பட்டதுதான்.

பேனைப் பெருமாளாக்குவது போல, தமிழர்கள் ஓர் 'தேசமாக' உருமாற்றமடைவதற்கு முன்பாகவே, தமிழர்க்கான பிரிந்து செல்லும் உரிமையைக் கோரும் வகையில் 'சமஷ்டி' 'தமிழரசுக் கட்சி' போன்ற பெயர்களின் மூலம் சிங்கள சமூகத்தையே கெலிகொள்ளச் செய்தார் செல்வநாயகம். இங்கு நுனித்து கவனிக்க வேண்டிய முக்கிய குறிப்பு சிங்கள வரிடத்து தமிழர்க்கெதிரான உளத் தூண்டல்களையும், அதே சமயம், தமிழரிடத்தில் சிங்களவர்க்கெதிரான மன உணர்வையும் ஏற்படுத்தவல்ல ஒரு வன்முறையுணர்வை உள்ளகத்தே கொண்டிருந்தன செல்வநாயகத்தின் 'சமஷ்டி' சொல்லும், அக் கட்சியும். தமிழ்-சிங்கள முரண்களுக்கும், மோதல்களுக்கும் வழி சமைத்ததில் 'சமகஷ்டி' சொல்லுக்கும் பாரிய பங்குண்டு என்றால் மிகையாகாது. இவ்விடத்தில்தான் முதல் 30 ஆண்டுகால 'அகிம்சைப் போராட்டம்' பற்றிய எமது கருத்தாக்கங்கள் மீள் பரிசிலனைக்கு உரியதாகின்றன!

இந்சந்தர்ப்பத்தில் 60களின் பிற்பகுதியில் வடபகுதியில், சண்முகதாசனின் கம்யூனிஸ்ட் கட்சியின் அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட்ட, தீண்டாமைக்கு எதிரான போராட்டங்கள் தீவிர மடைந்த போது இக்கட்சிகளின் நிலைப்பாடு, அவர்களின் சாதியச் சார்பு நிலையைத் தோலுரித்துக் காட்டுவதாக அமைந்தது. கூடவே தமிழரசுக் கட்சியின் முற்போக்கு முகமூடியும்கிழிந்துபோனது! வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் இளைஞர்கள், முஸ்லிம்களும் கூட மாக்சீயத்தின் பால் ஈர்க்கப்பட்டனர். இதன் விளைவு இக் கட்சிகளின் செயலாளர் நாயகங்களாக விளங்கிய அப்பாத்துரை அமிர்தலிங்கமும், மு. சிவசிதம்பரம் ஆகியோர் 1970 பொதுத்தேர்தலில் படுதோல்வியடைந்தனர்.

இச்சந்தர்ப்பத்தில், தமிழ் இளைஞர்கள் மாக்சீய வழியில் ஈர்க்கப்படுவதை தடுக்கும் முகமாக, இளைஞர்களைத் திசை திருப்பும் வகையில் இக்கட்சிகளின் தலைவர்களினால் 1972 வைகாசியில் ஆரம்பிக்கப்பட்டதுதான் தமிழர் ஐக்கிய முன்னணி (ரி.யூ.எவ்). இதற்கு ஆதாரமாக இவர்களுக்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்த துருப்புச் சீட்டு சிறீமா அரசினால் கொண்டுவரப்பட்ட தரப்படுத்தல் முறைமை. யாழ். குடாநாட்டிலும் மற்றும் கொழும்பு போன்ற பேர் நகரப் பகுதிகளிலும் அனைத்து இன மாணவர்களுக்குமாக பல்கலைக் கழகத் தேர்வில் கடைப் பிடிக்கப்பட்ட தரப்படுத்தல் முறைமையை இலங்கை வாழ் முழுத் தமிழ் மாணவர்களுக்குமான பிரச்சினையாக உருமாற்றி, அரசியல் நோக்கில் பொய்மைப் பிரச்சாரத்தின் மூலம் இளைஞர்களை தன்வயப்படுத்தியது தமிழர் ஐக்கிய முன்னணி. உண்மையில் பிற்பட்ட பிரதேசங்களில் வாழ் மாணவர்களையும் பல்கலைக் கழகத்திற்குள் உள்வாங்கும் நோக்கத்துடன் கொண்டுவரப்பட்டதே தரப்படுத்தல் முறைமை. மன்னார் போன்ற பல மாவட்டங்களில் இருந்தும் சகல தரப்பு மாணவர்களும் பல்கலைக் கழகத்தில் நுழைவதற்கு சான்றாக அமைந்ததில் தரப் படுத்தல் முறைமைக்கு பெரும் பங்குண்டு.

மேலும் 1972ல் புதிய அரசியல் யாப்பின் அடிப்படையில் இலங்கை, குடியரசாக மாறியதைத் தொடர்ந்து 'சிறீலங்கா குடியரசு; எனப் பேர் மாற்றம் பெற்றது. குடியரசுக்குரிய புதிய அரசியல் யாப்பில் பிரகடனப்படுத்தப்பட்ட சில சட்ட மூலங்களுக்கு எதிராக வகுப்புவாதப் பிரச்சாரங்களை மேற்கொண்ட தமிழர் ஐக்கிய முன்னணி, 1976ல் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியாக (ரி.யூ.எல்.எவ்) தன்னை மாற்றிக்கொண்டு வட்டுக்கோட்டை மாநாட்டில் தனித்தமிழ் நாட்டுக் கோரிக்கையையும் தீர்மானமாக்கியது. இதன் தொடர்ச்சியில் இளைஞர்களிடம் ஏற்பட்ட ஏமாற்றம், தமிழ்த் தேசியம் புத்திஜீவகளிடமிருந்து பறிக்கப்பட்டு நேரடி வன்முறை அரசியலாக தோற்றம் பெற்றது!

முழு வன்முறை இயந்திரமாகச் செயற்பட்ட புலிகளிடம் சிக்குண்ட தமிழ்த் தேசியம் இன்று மீண்டும் ஆரம்பித்த இடத்தில் வந்து நிற்கிறது. மீண்டும் புத்துயிர் வழங்குவதற்கான எத்தனிப்புக்கள் நிகழ்ந்துகொண்டுதான் இருக்கின்றன. புலிவழியில் எத்தனிக்க முயலும் பழைய போராளிகளின் முயற்சிகள் உடனுக்குடன் அமுக்கப்படுகின்றன. அத்துடன் அவை மக்களின் ஆதரவைப் பெறும் வாய்ப்புக்களைக் கொண்டனவாகவும் இல்லை. ஆனால் புலம் பெயர்ந்து வாழும் புத்திஜீவிகளும் பாதிரிமார் சிலரும் தமிழ்த் தேசித்தை கிறிஸ்த்தவத்துடன் இணைப்பதன் மூலம் மேற்குலக அனுசரணையுடன் தனிநாட்டைப் பெற்றுவிடலாம் என்ற கருத்தை முன்வைத்துச் செயற்படுகின்றனர். நிலாந்தன் போன்றவர்கள் மென் சக்தி என்று பேசிக்கொண்டே புதிய வன்முறைக்கான முயற்சிகளில் இளைஞர்களை ஈடுபடுத்த முனைகின்றனர்.

பொருளாதார அபிவிருத்தி சார்ந்து ஆரம்ப காலம்தொட்டு தமிழ்த் 'தலைவர்கள்" பேரளவில் அக்கறை செலுத்துவதில்லை என்பது உண்மையே! இவர்களில் பலரும் வழக்காடுவதையே தமது தொழிலாகக் கொண்டிருந்த தனாலும், அதனையே அரசியல் வாதிகளுக்கான பெருந்தகமையாக எண்ணியதாலும், பொருளாதாரம் சார்ந்து போதிய ஞானம் அற்றவர்களாக இருந்தனர் தமிழ் தலைவர்கள். அத்துடன் மக்களின் வாழ்வியல் பிரச்சனை குறித்து இவர்கள் யாரும் பிரக்ஞை பூர்வமான உணர்வைக் கொண்டிருக்கவில்லை என்பதும் யதார்த்தம். ஆனால் இதற்கு விதிவிலக்காக இருந்தவர்களில் காலம் சென்ற பருத்தித்துறை நாடாளுமன்ற உறுப்பினர் க. துரைரத்தினம் முதன்மையானவர். மக்களிடம் நேரடியாகச் சென்று உரையாடியதன் மூலம் மக்களின் அன்றாடப் பிரச்சனைகளை நன்கு அறிந்திருந்தார். கிராமம் கிராமமாக கீழ்நிலை மக்களிடம் நோரடியாகச் சென்று அவர்களின் வாழ்வாதாரப் பிரச்சனைகளை புரிந்துகொண்ட மனிதர்கள்தான் தலைவர்களாக வேண்டும். இத்தகைய நடைமுறை தேர்தல்கால சமிக்கையாக மட்டும் இருக்கக்கூடாது.

30 ஆண்டுகால போர்ச் சூழலை ரசித்தவர்களல்ல மக்கள். அனுபவித்தவர்கள். அதன் தாக்கத்தில் இருந்து இன்னும் மீண்டுவிடவில்லை. அதனால்தான் நாட்டின் அபிவிருத்திக்கும் பொருளாதார முன்னேற்றத்துக்கும் முக்கியத்துவம் அளிக்கிறார்கள். அத்துடன் அவர்கள் தமது உறவுகளைக் கண்டு பிடித்துக் தரும்படி கெஞ்சுகிறார்கள். தமிழ்க் கட்சிகளோ மேடைகளில் தொனிக்கும் வீராவேசப் பேச்சுக்களின் மூலம் மக்களின் வாக்குகளை குவிக்க முனைகின்றன. மக்களின் அன்றாடப் பிரச்சனைகள் குறித்தோ, காணாமல் போனவர்களைக் காண்பிப்பதற்கான முயற்சிகள் குறித்தோ நடைமுறைச் சாத்தியமான கருத்துக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையோ முன்வைப்பவர்களாக இல்லை. உண்மையில் காணாமல் போனவர் பிரச்சினை என்பது அரசாங்கத்துடன் மட்டும் சம்பந்தப்பட்ட ஒன்றல்ல. இராணுவத்துடனும் சம்பந்தப்பட்ட பிரச்சினை.

இந்நிலையில் அரசியல்வாதிகள் ஒவ்வொருவரும் காணாமல்போன ஒவ்வொருவரையும் தமது சொந்தப் பிள்ளையாகவோ, சொந்த அண்ணன், தங்கை, தம்பி, தாய், தந்தையாக உணரவேண்டும். உண்மையில் சம்பந்தரோ, அல்லது ஏனைய அரசியல் பிரதிநிதிகள் ஆகட்டும், தங்கள் சொந்தப் பிள்ளைகள் காணாமல் போயிருந்தால் என்ன செய்திருப்பார்கள் என்பதை உணர்ந்து பார்க்க வேண்டும். சர்வதேச மனித உரிமை மன்றங்களிடம் மனுக் கொடுத்துவிட்டு பொறுமையாக இருந்திருப்பார்களா? இல்லை, எப்படியாவது கெஞ்சிக் கூத்தாடி ஜனாதிபதியினதும், இராணுவத்தினதும் காலடிகளில் விழுந்து தமது பிள்ளைகளை மீட்டிருப்பார்கள். காணாமல்போனோர் விடயத்தில் இத்தகையதோர் நடைமுறைதான் இன்று வேண்டும். ஒருசில வருடங்களுக்கு முன் யாழ். பல்கலைக்கழக மாணவர் கைது விடயத்தில் இவ்வித நடைமுறையினூடகத்தான் ஒரு மாணவன் மீட்கப்பட்டான். பலரும் அறிந்த விடயம் இது! அண்மையில் காலமாகிய அம் மாணவனின் தந்தை கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற மாகாணசபை உறுப்பினர் என்பது பலர் அறியாத விடயம்.

மேற்படி எடுத்துரைப்புக்களின் மூலம் இங்கு கூற வருவது, காணாமல் போனோர் விடயத்தில் அரசியல் விளையாட்டு செல்லுபடியாகாது என்பதைத்தான். பதிலாக தமிழ்ப் பிரதிநிதிகள் மிகுந்த புத்திசாலித்தனத்துடனும் விவேகத்துடனும் நடந்து கொள்ள வேண்டும் என்பதையே!


ஒரு கதையொன்று இருக்கிறது. ஒரு சந்தர்ப்பத்தில் ஓர் அறிவாளி ஒரு ஞானியை சோதித்துப் பார்க்கும் நோக்குடன் அவரிடம் கேட்டார் “உங்களை பெரும் ஞானி என்று எல்லாரும் புகழ்கிறார்களே. நான் கேட்கும் கேள்விக்கு உங்களால் சரியான பதிலைத் தர முடியுமா?” என்று. புன்னகைத்த ஞானி எவ்வித பதட்டமும் இன்றி “சரி கேள் பாப்பம்” என்று ஞான அமைதியுடன் பதிலளித்தார். ஒரு பூச்சியைப் பிடித்து முதுகுப்புறமாக இருக்கும்தனது மூடியகைகளுக்குள் வைத்துக் கொண்டிருந்த அறிவாளிஞானியிடம் கேட்டார் “எனது கைகளுக்குள் இரு பூச்சிகள் இருக்கின்றன. அவை உயிருடன் இருக்கின்றனவா அல்லது இறந்துவிட்டனவா?” புன்னகைத்த ஞானி சுருக்கமாகக் கூறினார் “மகனே! அவை உயிருடன் இருப்பதும், இறப்பதும் எல்லாமே உன் கையில்தான் இருக்கிறது” என்று. உண்மையில் காணாமல் போனவர்களை வெளிக்கொணரும் விடயத்திலும் ஞானியின் ஞானநிலையுடன்தான் அரசை அணுகவேண்டும். இல்லையேல் காணாமல் போனவர்கள் காணாமலே போய்விடுவார்கள்!

இலங்கையில், அரசியல் தீர்வு குறித்த பிரச்சினைகளும் இத்தகையதுதான். ஆரம்பகால சிங்கள இடதுசாரிகளிடம் இனப்பிரச்சினைக்கான தீர்வுபற்றிய எண்ணம் வேரூன்றியிருந்தது. ஆனால், தமிழ்கட்சிகளின் வர்க்க நிலைப்பாடுகள் அவர்களுக்குச் சாதகமாக அமைந்திருக்கவில்லை என்ற யதார்த்தத்தை மறந்துவிட முடியாது. இலங்கையைப் பொறுத்தவரை மாறி மாறி வரும் சிங்கள அரசாங்கங்களின் உயிர் வாழ்வுக்கு அடிப்படை இனவாதம். வாய்மொழி மூலமான இனவாதத்தை மட்டும் இங்கு குறிப்பிடவில்லை. சிலவேளை தேர்தல் களங்களில்கூட வகுப்புவாதத்தைப் பேசாமல் விட்டுவிடுவார்கள், ஆனால், நடைமுறையில் அரசாங்கக் கட்சிகளுக்கிடையிலான போட்டி அரசியலில் அரசியல் தீர்வு குறித்த விடயங்களை மிகுந்த அச்சத்துடனையே அணுகுகின்றன. அவ்வகையில்சிறுபான்மைத் தேசங்களின் அரசியல் தீர்வு குறித்த பிரச்சினைகளில் அக்கறையில்லாமல்இருப்பதும், அல்லது அப்பிரச்சினைகளைத் தள்ளிப்போடுவதும் கூட அடிப்படையில் இனவாதமே! இது சேனநாயக்கா, பண்டாரநாயக்கா காலத்தில் இருந்து தொடர்கின்ற ஒரு சாபக்கேடு!

உண்மையில் இப்பிரச்சினை குறித்த பயணத்தில் தமிழ்க் கட்சிகளுக்கு நேர்மையான ஓர் அக்கறை இருக்குமாயின், கட்சி பேதங்களைக் கடந்து, தமது வெற்றி தோல்விகளுக்கப்பால், சகலகட்சிகளையும் சமூக அக்கறை கொண்ட பலரையும் ஒன்றிணைக்கும் விதமான திறந்தவெளி ஆய்வொன்றை மேற்கொள்வதற்கு முயற்சிக்க வேண்டும். குறிப்பான விசயம் சகலவித கருத்துக்களையும் முன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வைப்பதற்கான ஜனநாயகப் பண்புடன், உரையாடற் பண்பையும் பேணும் வகையில் இவ் ஆய்வு மாநாடு இடம்பெறவேண்டும்.

போர்முடிந்து 6 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் இத்தகைய ஓர் முடிவுக்கு தமிழ்ச் சமூகம் வராமல் இருப்பதும், தமிழ்க்கட்சிகள் இதற்கான முன்னெடுப்புக்களில் ஈடுபடாமல் இருப்தும் கூட ஒருவகை போட்டி அரசியலின் வெளிப்பாடே! இதுவும் ஒருவகையில் சிங்களக் கட்சிகள், தமக்கிடையிலான போட்டி அரசியலின் அடிப்படையில், சிறுபான்மைத் தேசங்களின் அரசியல் தீர்வு குறித்த பிரச்சினைகளில் அக்கறையில்லாமல் இருப்பதற்கும், அப் பிரச்சினைகளைத் தள்ளிப்போடுவதற்கும் ஒப்பானதே!

எந்தவொரு பிரச்சினைக்கும் முழுமைத் தீர்வு கிடைப்பதில்லை என்பது ஒரு வாழ்வியல் நியதி. வரலாற்றுஇயங்கியல்விதியும்கூட! அரசியலுக்கும் இது பொருந்தும். இதை மீறி முழுமைத் தீர்வைப் பெற்றுத் தருவோம் என்று அரசியல் கட்சிகள் கூறுவதெல்லாம் சுத்த பம்மாத்து. ஆனால் மக்கள் இதைப் புரிந்துகொள்ளும் திராணியற்றவர்களாகவும், பழையவற்றை இலகுவில் மறந்துபோகும் இயல்புடையவர்களாகவும் இருக்கிறார்கள் என்பதை நன்றாகப் புரிந்துகொண்டவர்கள் அரசியல் தலைவர்கள். அதனால்தான் அவர்கள் மீண்டும் மீண்டும் துணிச்சலுடன் வருகிறார்கள் மக்களிடம். திரும்பத் திரும்ப ஒரே விசயத்தைச் சொல்லி மக்களின் தலையில் மிளகாய் அரைத்துக்கொண்டிருக்கிறார்கள். சுமார் அரை நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே மக்களால் தூக்கி வீசப்பட்ட கறைபடிந்த சைக்கிள் சின்னத்தோடு, படு பிற்போக்குத் தனத்தின் அடையாளமாக கிடந்த தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைமையில், இதே சூத்திரத்தோடும் தந்திரத்தோடும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி வாசல் கதவுளைத் தட்டுகிறது இன்று!

தமிழ்க் கட்சிகளினதும் இயக்கங்களினதும் அணுகுமுறையினால் அரசியல் தீர்வைப் பெற்றுவிட முடியாது என்பது 60 ஆண்டு கால அனுபவம் கற்றுத்தந்த பாடம். இன்றும் கூட கடந்த 35 ஆண்டு கால பல்லவியைத் திரும்பத் திரும்பப் பாடுவது போல, பேரம் பேசும் திறனுடனும் சர்வதேச சக்திகளின் உதவியுடனும் இனப் பிரச்சனைக்கான தீர்வைப் பெற்றுவிடலாம், ஏன்? தனிநாட்டைக்கூட அமைத்துவிடலாம் என்றெல்லாம் கதைவிடுவிடுகிறார்கள்.

ஆனால், நவீன காலத்தைக் கடந்துவிட்ட இன்றைய புதிய சூழலில் 'உரையாடல் முறைமை" க்குத்தான் மேற்குலகம் மிகுந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியத்துவம் அளிக்கிறது. அது மட்டுமல்ல 'முரண்பாடுகளின் உரு மாற்றம்" (கொன்ஃப்ளிக்ற் ற்றான்ஸ்ஃவோமேசன்) போன்ற கருத்தாக்கங்கங்களையும் மிகுந்த கவனத்தில் கொள்கிறார்கள். அவ் வகையில் எமது தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு குறித்து நாம் முன்மொழிவதும் உரையாடல் முறைமையைத்தான். அரை நூற் றாண்டுகால அரசியல் வரலாற்றில் எமது தலைவர்களும் சரி, சமூக அக்கறை கொண்ட புத்திஜீவிகளும் சரி, 8000கிலோ மீற்றர் தூரத் துக்கு அப்பால் இருக்கும் மேற் குலக சக்திகளுடன் உரையாடிய அளவுக்கு, அண்மையில், சுமார் 80, 90 கிலோமீற்றர் தூரத்தில வசிக் கக்கூடிய சிங்கள சமூக சக்தி களுடன் எமது பிரச்சினைகள் பற்றி உரையாடியிருப்போமா?

சுற்றுச் சூழல் பிரச்சினை, சுகா தாரப் பிரச்சினை, ஆரோக்கிய வாழ் வுக்கான பாதுகாப்பு, பெண்களுக் கான பாதுகாப்பு, குழந்தைகளுக் கான பாதுகாப்பு என்று அவர்களுக்கும் எமக்கும் இருக்கக்கூடிய பொதுப்பிரச்சி னைகள் குறித்து எப்போதா வது கதைப்பதற்கு எத்தனித்திருப் போமா?

மேலும், உரையாடல்களை அரசாங்கம், மற்றும் அரசியல் தலைவர்களைக் கடந்து பல தளங் களுக்கும் முன்னெடுத்துச் செல்லவேண்டியது இன்னொரு முக்கியம் விசயம். உரையாடல் களுக்கான ஆரம்பம் பொதுப்பிரச்சி னைகள் பற்றியதாக அமைவது சிறப்பு. குறிப்பாக சுத்தமான காற்று, தண்ணீர், சுகாதார வாழ்வு, பிள்ளை களுக்கான கல்வி, கிராமங் களுக்கான அதிகாரம் என்று ஒரு நீண்டகால உரையடலுக்கூடாக சகல சமூக சக்திகளுடனும் நாம் பேசவேண்டும். நாம் இல்லா மலே எம்முடன் அவர்கள் பேசக் கூடிய மனோ நிலையைத் தோற்று விக்கவேண்டும். அவர்கள் மீது எமக்கும், எம்மீது அவர்களுக்கும் இருக்கக்கூடிய அச்சத்தை, வெறுப் புணர்வை தவிர்க்கும் வகையில் சமூகங்களுக்கு இடையிலான இணைப்பை உருவாக்கவேண்டும். இனம், சாதி, சமயம், பிரதேசம் என்று தமிழர்களிடம் காணப்படும் இயல்பான வேறுபாடுகளைக் கடந்து, மலையக மக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்த்தவர்கள் என்று சகல சமூக சக்திகளுடனும் எமது உரையாடலைத் தொடர வேண்டும், உறவைப் பேண வேண்டும். இவ்வித ஆற்றுகைக் களுக்கூடாகவும், நீண்டகால நோக்கில் உரையாடுவதன் மூலமும் நாட்டின் சகல தரப்பினரதும் ஒரு மித்த தொனியுடனும்தான் எமது பிரச்சினைகளுக்கான அரசியல் தீர்வை நாம் எட்டமுடியும். இதுவே யதார்த்தம்.

சிங்களத் 'அரசியல் தலை வர்களைப்" பொறுத்தவரை அவர் களின் நோக்கமாக இருப்பது சிங்கள மக்கள் மீதும் ஏனைய சிறுபான்மைத் தேசிய இனங்கள் மீதும் அதிகாரம் செலுத்துவதே! அதேபோன்று தமிழ்த் 'தலை வர்களின்" நோக்கமாக இருப் பது, தமிழ் மக்கள்மீது தமது அதிகாரத்தையும் ஆளுமையை யும் நிலைநாட்ட முயல்வது! தனிநாட்டுக் கோரிக்கைக்கான உள் நோக்கமும் இதனையே நோக் காகக் கொண்டது என்றால் பொய்யாகாது.

மேலே நாம் குறிப்பிட்ட பல்வகை நடைமுறைச் செயற் பாடுகளை நோக்கி அரசியல் தலைவர்களும், கட்சிகளும் நகராத வரை, மக்களை வழிநடத்திச் செல்லாத வரை, காணாமல் போன வர்கள் பிரச்சினைகளாக இருந்தா லும் சரி, அரசியல் தீர்வுப் பிரச்சனை கள் ஆனாலும் சரி இத் தலைவர் களினாலும், அரசியல் கட்சிகளி னாலும் ஆகப்போவது ஒன்று மில்லை என்பதே உண்மையிலும் உண்மை!

ஆக மொத்தத்தில், 2015 ஆகஸ்ட் 17 நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் 'தலைவர்கள்' மூலம் மக்களுக்குக் கிடைக்கப் போவது ஒன்றுமில்லை. சிலவேளை தமிழ்த் தலைமைகள் அதிகபட்ச ஆசனங்களைப் பெறும் பட்சத்தில், மைத்திரிபால சேனநாயக்காவின் ஜனாதிபதி பதவியைப் பாது காக்கவும், மீண்டும் அதிகாரத்தில் அமர நினைக்கும் மகிந்த ராஜ பக்சவின் ஆசைக்கு முற்றுப்புள்ளி வைக்கவும் முடியும். அவ் வளவுதான்.

மேலும், கட்சி ஆத ரவாளர்களைப் பொறுத்தவரை, கிறிக்கெற் விளையாட்டில் தாம் சார்ந்த அணி ஜெயிப்பதைப் பார்த்து குதூகலிக்கும் ரசிகர் களைப் போல, இவர்களும் (இக் கட்சி ஆதரவாளர்களும்) தமது கட்சியின் வெற்றியைக் கண்டு கைதட்டி ஆரவாரப்படலாம்! வேணுமென்றால் ரத்தத் திலக மிட்டு தமது விசுவாசத்தை மீண்டு மொருமுறை நிலைநாட்டலாம். ■

'தேசம்' லண்டன் வெளியீட்டின் இலங்கைக்கான பதிப்பு. தொடர்பு முகவரி த.பெ.எண் 1. பொல்கொல்ல.
மின்னஞ்சல் முகவரி thesam97hotmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org